# ஞானச்சுடர்

ஆடி 2025


331ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்(து)**
**ஈண்டிய கேள்வி யவர்.**

**பொருள் :** பொருள்களை நுட்பமாக ஆராய்ந்தறிந்து நிறைந்த கேள்வியையுடையவர் தவறாக ஒன்றை அறிந்தவிடத்தும் அறிவுக்குறைவான சொற்களைச் சொல்லார். (417)

**கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி.**

**பொருள் :** அறிவு உரைகளைக் கேட்டலாகிய கேள்வியால் துளைக்கப்படாத காதுகள் கேட்கத் தக்கனவாயிருப்பினும் செவிட்டுத் தன்மையினவாம். (418)

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*



**தன்னை யறிந்தோமே**

தன்னை யறிந்தோமே - கிளியே
தவத்தி லுயர்ந்தோமே
பின்ன மிறந்தோமே - கிளியே
பெருமா னருளாலே
எம்மை நிகராவார் - கிளியே
எவரு முலகிலில்லை
செம்மை மனத்துடனே - கிளியே
சிவன்பாதம் நினைப்போமே
இம்மை மறுமைக்கும் - கிளியே
எவரும் இணையில்லை
அம்மையு மப்பனுமே - கிளியே
ஆம்துணை நீயறியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 331



2025 **பொருளடக்கம்** ஆடி


| | | |
|---|---|---|
| பேச்சில் நிதானம் வேண்டும் | சி. நற்குணலிங்கம் | 01 – 04 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 05 – 08 |
| சைவ சமயிகளே சீர்தூக்கிப்... | முருகவே பரமநாதன் | 09 – 11 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 12 – 13 |
| சிவபெருமானின் அன்பு | திருமதி பொ. திலகவதி | 14 – 15 |
| திருவடிப் பெருமை | செ. பாலச்சந்திரன் | 16 – 18 |
| பவளவிழா சார்ந்த... | வ. சிவநேசன் | 19 – 20 |
| தில்லைக் கூத்தனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 21 – 24 |
| அருளாளர்கள் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 25 – 26 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 27 – 29 |
| ஞானஞாயிறு நாவலர்... | ச. தண்டபாணிகதேசிகர் | 30 – 32 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 33 – 39 |
| அமைதிக்கான வரங்கள்... | கே.எஸ். சிவஞானராஜா | 40 – 41 |
| திருப்புகழைக் கற்றார்... | துரை. கணேசமூர்த்தி | 42 – 45 |
| சமுதாயப் பணிகள் | தொகுப்பு | 46 – 54 |
| உற்சவகால நிகழ்வு | சந்நிதியான் ஆச்சிரமம் | 55 – 56 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்


Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai,
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் ஆனி மாத வெளியீடு

## வெளியீட்டுரை:



ஞானச்சுடர் 330ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆசிரியர் திரு ச. வாகீசன் அவர்கள் ஆற்றினார்கள்.

சந்நிதியானுடைய பாதாரவிந்தங்களை வணங்கிக் கொண்டு ஆச்சிரமத்தின் சுவாமிகள் அவர்களுக்கும் தொண்டர்களுக்கும் இங்கே வருகை தந்துள்ள அடியவர்களுக்கும் அடியேனின் சிரம் தாழ்த்திய காலை வணக்கங்கள்.

330ஆவது ஞானச்சுடர் மலர் கைகளிலே தவழ காத்திருக்கின்றது. இந்த நூலைப் படிப்பதனாலே ஏற்படுகின்ற பயன் என்னவென்று சொன்னால் கற்பவர்கள் சமுதாயத்தில் உயர்வாக வருவார்கள் என்பது திண்ணம். அதேநேரத்தில் இதனை வாசிப்பதன் ஊடாக அறிவைப் பெருக்கிக் கொள்வதுடன் சமயம் சார்ந்த சிந்தனைகளை அறிந்தும் கொள்ளலாம். எனது தனிப்பட்ட ரீதியிலே க.பொ.த. உயர்தரத்திலே இந்துநாகரீகம் கற்றுக்கொண்டிருக்கின்றபோது இம் மலரின் இந்துசமயம் சார்ந்த ஆக்கங்கள், சைவ விழுமியங்கள் தொடர்பான கருத்துக்கள், திருமந்திரம் தொடர்பான ஆக்கங்கள் என்பன என்னுடைய பாடத்தைக் கற்பதற்கு இலகுவாக இருந்தது என்பதைக் கூறுவதில் நான் பெருமைப்படுகின்றேன்.

தொடர்ந்து இம் மலரை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்ற சிந்தனை உங்களுக்கு வரலாம். ஆனால் இதனை எந்தக் கடையிலோ வெளி நிறுவனங்களிலோ பெற்றுக்கொள்ள முடியாது. இது ஓர் சிறப்பான அம்சம் அதேவேளை எந்தவிதமான விளம்பரங்களையோ, ஏனைய நூல்களில் காணப்படுகின்றதுபோல அனுசரணையாளர்களினையோ காணமுடியாது.


இம் மலரானது முற்றுமுழுதாக முருகப்பெருமானது அருளோடும் சுவாமி அவர்களின் மேற்பார்வையோடு வெளியிடப்பட்டுக்கொண்டிருக்கின்றது. 2000க்கு மேற்பட்ட பிரதிகள் மாதந்தோறும் அச்சிடப்பட்டு வருகின்றது. உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் இதனைப்பெற்று பயன் அடைந்து வருகின்றனர். அட்டைப்படத்தில் காணப்படுகின்ற சந்நிதி வேற்பெருமானை வணங்குவதன் ஊடாகவும், இம் மலரில் உள்ள விபூதி பிரசாதத்தை அணிவதன் ஊடாக தங்களது துன்ப துயரங்களை அடியார்கள் போக்கிக் கொள்கின்ற தன்மை இம் மலருக்கு இருக்கின்றது.

அந்தவகையில் மென்மேலும் வளர்வதற்கு முருகப்பெருமான் துணை நிற்பார் என்று கூறி வெளியீட்டுரைக்கு வாய்ப்பளித்த சுவாமி அவர்களுக்கு நன்றிகூறி எல்லாம் வல்ல சந்நிதிவேலவனின் பாதாரவிந்தங்களில் பணிந்து தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவுசெய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்பீட்டுரை:

ஆனி மாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையினை சைவப்புலவரும் அதிபருமாகிய திரு க. கைலைநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.



ஆற்றங்கரையில் இருந்து உலக மக்களுக்கெல்லாம் படி அளந்து கொண்டிருக்கின்ற வேற்பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்தும், மதிப்பிற்குரிய கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளையும், பேரவை உறுப்பினர்களையும் அடியவர்களையும் பணிந்து இன்றைய இந்த மலருக்கான மதிப்பீட்டுரையை நான் ஆற்றுவதற்கு முற்படுகின்றேன். வருடா வருடம் ஆனி மாத ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையை ஆற்றுவதற்கு மூல காரணமாக இருப்பது சந்நிதி வேலவனும் ஆச்சிரம சுவாமிகளும்தான் என்று கூறுவதில் நான் பெருமைப்படுகின்றேன்.

அவ்வகையில் கடந்த பல வருடங்களாக இவ் ஆன்மீக மலர்மூலம் ஒரு ஆன்மீகவாதியாகவும், சொற்பொழிவாளனாகவும் பிரகாசிக்க என்னால் முடிகிறது. இது தற்புகழ்ச்சி அல்ல. சுவாமி அவர்களிடம் உள்ள பண்பே எமை வழிப்படுத்துகிறது என்று கூறி மலருக்குரிய மதிப்பீட்டுரையை ஆரம்பித்தார்கள்.

சந்நிதி வேலவனது ஆலயத்தினது தோற்றமைப்பு அட்டைப் படத்திலேயே காணப்படுகின்றது. இது ஒரு மிகச் சிறப்பான அம்சமாகும். முதலிலே குறள்வழி சொல்லப்பட்டிருக்கின்றது. இது எமக்கெல்லாம் தேவையானதுபோல் அமைகின்றது.

ஆச்சிரமம் சார்ந்து செயற்பட்டவர்கள் அல்லது காப்பாளராக இருந்தவர்கள் ஆச்சிரமத்தோடு நீண்ட தொடர்பில் இருந்தவர்களின் இழப்பு ஆன்மீகத்திற்கு பெரும் இடைவெளியாகும். முதலாவதாக நல்லை ஆதீன முதல்வர். இரண்டாவதாக வல்வை பார்வதி சமேத வைத்தீஸ்வர ஆலய பிரதமகுரு ப. மனோகரக்குருக்கள் ஆகும்.

யாழ்ப்பாணத்திலே எத்தனை பெரியவர்கள் அடுத்துவரும் சந்ததியினரை தட்டிக் கொடுக்கின்றார்கள் என்றால் அது மிக மிகக் குறைவு. ஆனால் எங்களது சுவாமி எங்களைப் போன்றவர்களைத் தட்டிக்கொடுக்கின்றார். அதை நான் என்றைக்கும் சொல்லுவேன். ஏனென்றால் எங்கேயோ இருந்த எங்களை எல்லாம் இங்கே அறிமுகம் செய்து நாங்கள் இந்தளவுக்கு வளர்வதற்கு உறுதுணையாக நின்றுள்ளார்.

தொடர்ந்து மலரில் இடம்பெற்ற ஆக்கங்கள் ஒவ்வொன்றையும் பகுப்பாய்வு செய்து சபையில் இருந்தவர்களுக்குக் கூறியதோடு அதன் தரத்தையும் குறிப்பிட்டு தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்பினரால் கொழும்பு அருங்காட்சியகத்தில் கேட்போர் கூடத்தில் வைத்து ஆச்சிரம சுவாமிகளுக்கு தேசாபிமானி என்னும் விருதும், மனித உரிமைகளிற்கான மாகாண இயக்குனர் என்ற பதவி நிலையினையும் வழங்கியதையிட்டு ஆச்சிரமத்தில் வைத்து பேரவையினரால் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் ஞானச்சுடர் சிறப்புப்பிரதி வழங்கலுடன் அன்றைய நிகழ்வு இனிதே நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆ. மகேந்திரலிங்கம்**
(வேம்போலை, இணுவில்)
**உரிமையாளர்**
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
**கணேசலிங்கம் ஞானாமிர்தம்**
(குப்பிளான்)
**செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்**
(யாழ்ப்பாணம்)
**ஜெ. கலைச்செல்வி**
(கோப்பாய்)
**செ. வாமதேவன்**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**V. சேனாதிராசா**
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
**பிறேமதாஸ் சசிகலா**
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
**செல்வி தர்மினி ரவிச்சந்திரன்**
(கட்டுடை, மானிப்பாய்)
**க. சிவஞானசுந்தரம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திருமதி பொ. இரத்தினசோதி**
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
**ச. கிருஷ்ணமூர்த்தி**
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
**செ. அட்செயலிங்கம்**
(ஆசிரியர், அல்வாய்)
**மூ.சிவலிங்கம்**
(காரைக்கால் வீதி, இணுவில்)
**க. விகர்ணன்**
(குமரகோட்டம், கோண்டாவில்)
**R. பொன்னுராசா**
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
**S. தர்மலிங்கம்**
(கமலபதி மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
**சி. குகநாதன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சில் நிதானம் வேண்டும்

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

பேச்சில் நிதானம் என்பது நாக்கின் வழியாகவே வெளிப்படுத்தப்படுகிறது. பேச்சில் நிதானம் உள்ளோர் வாழ்வில் நிம்மதி பெறுவர். தமது உடலையும், உள்ளத்தையும் கட்டுப்படுத்தும் ஆற்றலும் அவர்களிடம் தங்கும். மனிதனின் சிந்தனைகளிலிருந்து வெளிப்படும் தீச்சொல், பொய்யுரைகள், அவதூறுகளைக் கட்டுப்படுத்தி, தணிக்கைசெய்து வெளியிட்டு எம்மை முரண்பாடுகள், மன இறுக்கம், நிம்மதியற்ற நிலை என்பவற்றிலிருந்து பாதுகாக்கும் காவலன் நாக்காகும். பேச்சில் நிதானத்துக்கும் நாக்குக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

திருக்குறளில் "வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இல்லாத சொல்" அதாவது வாய்மை என்று சொல்லப்படுவது, அது பிறருக்கு தீமை இல்லாதபடி யாதொரு சொல்லையும் எப்போதும் சொல்லுதல் ஆகும். குற்றமே இல்லாத நன்மையைத் தருவது என்றால், பொய்யான வார்த்தைகளை உச்சரிக்கக்கூடாது. அடுத்தவர் மனதைப் புண்படுத்தக்கூடாது. அவசியமானதை இரத்தினச் சுருக்கமாகப் பேச வேண்டும். பேசிக்கொண்டே போவதை அறிவுக் குறைபாடாக கருதுகிறார் வள்ளுவர். கூறியதுதான் வார்த்தை. அது கூரான வார்த்தையாயின் மனம் மழுங்கடிக்கப்படும். எனவே வார்த்தைகளை வெளியிடுவதில் நிதானம் இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய வார்த்தைகள், மனதுக்கு இதமளிக்கும் வார்த்தைகள், குறைகூறும் வார்த்தைகள், பாராட்டும் வார்த்தைகள், அவதூறான வார்த்தைகள், மரியாதை குறைவான வார்த்தைகள், அன்பான வார்த்தைகள், நயமான வார்த்தைகள், கோபத்தை ஏற்படுத்தும் வார்த்தைகள், தூய்மையான வார்த்தைகள், மனதில் வெறுப்பை ஏற்படுத்தும் வார்த்தைகள், பிரிவை ஏற்படுத்தும் வார்த்தைகள், வெறுப்பை ஏற்படுத்தும் வார்த்தைகள், முரண்பாட்டை ஏற்படுத்தும் வார்த்தைகள் எனப் பல்வேறு வகையான வார்த்தைப் பிரயோகங்கள் உள்ளன. இவற்றில் பிரச்சனைகளை தோற்றுவிக்காத நன்மை பயக்கக்கூடிய வார்த்தைகளை பேச்சில் பயன்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும். இவற்றைப் பேச்சில் உபயோகிக்க வேண்டுமானால் பேச்சில் நிதானம் வேண்டும்.

நாம் பேச்சில் நிதானத்தைக் கையாளுவதன்மூலம், நல்ல நண்பர்கள் இணைந்து கொள்வார்கள். அவர்கள் மூச்சு நிற்கும்வரை எம்முடன் இணைந்தே காணப்படுவர். பெரியோர்கள், முதியோர்கள் என்போரின் அன்பு கிட்டும். அவர்களின் அனுபவமும் சேர்ந்தே கிட்டும். சமூகத்தில் நல்ல மதிப்பு ஏற்படும். பலரது இதயங்களை வருடமுடியும். எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படமாட்டாது. யாரும் பயப்படத்தேவையில்லை. பலரது வேதனைகள், கவலைகள் கூட நீங்க வழிகோலும். எதிரிகளை சம்பாதிக்க நேரிடாது. சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட மாட்டார்கள். அன்பு மேலோங்கும். குடும்பம் சிறக்கும். மனஅமைதி கிடைக்கும். வாழ்க்கைக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் முரண்பாடு தோற்றம் பெறமாட்டாது. உறவுகளுக்கு இடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லுறவு ஏற்படும். எல்லோரிடமும் நன்மதிப்பு ஏற்படும். குடும்பங்களுக்கிடையே விரிசல் ஏற்படாது. குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும்.

இனிய சொற்களை சொல்பவன் ஆகுதல் ஒருவனுக்கு அணிகலன் ஆகும் என வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார். ஒருவர் பேசும்போது நின்று நிதானித்து பயக்கும் இனிய வார்த்தைகளை பிரயோகிக்க வேண்டும். ஆறுதலாக வார்த்தைகளை பிரயோகிக்க வேண்டும். அவசரப்பட்டு வார்த்தைகளை கொட்டிவிடக்கூடாது. நாவை அழிவுக்கன்றி ஆக்கத்துக்கு பயன்படுத்தவேண்டும். கனிவான, அமைதியான சூழலைக் குழப்பாத சொற்களைப் பரிமாற வேண்டும். நாவினால் எம்மைக் கட்டுப்படுத்தி நேரிய வழியில் வாழவேண்டும். நாவடக்கம் நன்மை தருமே ஒழிய தீமை தராது.

மீன்கள் வாயைத் திறக்காதவரை தூண்டிலில் அகப்படாது. அதுபோல வாயை அமைதியாக அடக்கி வைத்திருந்தால் பிரச்சனைகள் வாயால் எழமாட்டாது. பிறருடன் பேசும்போது நிதானத்துடன் இன்சொல் வழங்குவதன்மூலம் புரியும் ஈகை மிகச் சிறந்தது. அப்பர் சுவாமிகள் "வாயே வாழ்த்து கண்டாய்" என நாவுக்கு பணிப்புரை வழங்கினார். "வாய் நல்லதானால் ஊரும் நல்லது" என்பது வாய்பற்றிய பழமொழி. நாவடக்கம் கோடி நன்மை தரும் என்பார்கள். தீயினால் சுட்ட புண் ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்ட வடுவானது உள்ளத்தில் ஒருபோதும் மறையவே மறையாது.

ஒருவன் கோபமாகப் பேசினால் குணத்தை இழப்பான். அதிகமாகப் பேசினால் அமைதியை இழப்பான். நிதானமற்றுப் பேசினால் மகிழ்வான வாழ்வை இழப்பான். எனவே எல்லோரும் வாழ்வில் வெற்றிபெறவேண்டின், இன்பம் ஏற்படவேண்டின், வாழ்வில் அமைதி காணவேண்டின் நிதானம் பேச்சில் இருக்க வேண்டும். வீட்டில் தந்தை மதுவுக்கு அடிமையாகி இருப்பின் அவரது பிள்ளைகள் தந்தையின் வார்த்தைகளால் துன்புறுத்தலுக்கு உள்ளாகின் றனர். வீட்டில் தொடங்கும் இந்த வன்முறையானது உடலியல் ரீதியாக, உளரீதியாகவும் பாதிப்பினை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்துகின்றது. சங்கடங்கள் வரும்போது நாவினால் தடம் மாறாதீர்கள். எந்த வார்த்தை பேசவேண்டும் என அறிந்து பேசுவதைவிட எந்த வார்த்தையை பேசக்கூடாது என உணர்ந்து பேசவேண்டும். மகிழ்ச்சியானது எம்மைப் பொறுத்தே அமைகின்றது.

மிகவும் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேச வேண்டும் என்கிறார் வள்ளுவர். 645ஆவது குறளில் "சொல்லுக சொல்லில் பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து". ஒரு சொல்லைச் சொல்லும்போது அதைவிடச் சிறந்த பொருத்தமான சொல் இல்லாதவாறு தேர்ந்தெடுத்துச் சொல்ல வேண்டும். அவ்வாறாயின் பேச்சில் சொல்குற்றமோ, பொருள் குற்றமோ வர வாய்ப்பே இல்லை. சொற்கள் மிகவும் வலிமையானவை. அவற்றை முறையாகப் பயன்படுத்தத் தெரிந்தவர்கள் பெறாத வெற்றிகள் இல்லை. அவற்றை முட்டாள்தனமாகப் பயன்படுத்துபவர்கள் படாத கஷ்டங்கள் இல்லை. பேச்சையே மூலதனமாக வைத்து நாட்டின் ஆட்சியையே பிடித்தவர்களை நாம் அறிவோம். சரியாகப் பேசத்தெரியாமல் தம்மிடமுள்ள இருப்புக்களையே இழந்தவர்களையும் தினசரி

*போலியான புன்னகையைவிட திமிரான கோபமே மேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் வாழ்க்கையில் பார்க்கிறோம். வாய்க்கு வந்தபடி பேசுவதைவிட புன்சிரிப்புடன் பேசுவதே ஆகச் சிறந்த செயல்.

உடலின் மிக வலிமையான சதைப் பகுதியான நாக்கை மிக அவதானமாகக் கையாள வேண்டும். புத்திசாலித்தனமான, அறிவாளித்தனமான விவாதங்கள் அதிகம். உணர்வுபூர்வமான உரையாடல்களும், சின்னச்சின்ன பாராட்டுகளும் இன்றைய உலகில் குறைவு. அமைதியைவிட சக்தியான சத்தம் உலகில் இல்லை. உன் அமைதியை ஒருவன் புரிந்துகொண்டால் உன் வார்த்தைகளை அவன் தவறாக ஒருபோதும் புரிந்துகொள்ளமாட்டான். வாழ்க்கையின் வெற்றிக்கு அர்த்தமில்லாமலும், தேவையில்லாமலும், பின்விளைவுகளை அறியாமலும் பேசிக்கொண்டிருப்பதை விட்டுவிடுங்கள். நீங்கள் சொல்வதே சரி, செய்வதே சரி என்று கடைசிவரை வாதாடாதீர்கள். உண்மை எது? பொய் எது? என்று சரியாக விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கும், அங்கு கேட்டதை இங்கும் சொல்வதை விட்டு விடுங்கள். எல்லோரிடத்திலும் எல்லா விடயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக்கொண்டிராதீர்கள். பேச்சிலும் நடத்தையிலும் திமிர்த்தனத்தைக் காட்டாமல் பண்பையும், பணிவையும் காட்டுங்கள்.

பேசாதவர்களைப்பற்றி நினைப்பதை விட்டுவிட்டு, பேசுபவர்களிடமும் சந்தோசமாகப் பேசிப் பழகுங்கள். அதுவே தேவையில்லாத மன அழுத்தங்களைக் குறைக்கும். "பிறரை அழவைப்பவர்கள் தங்கள் கண்களிலும் கண்ணீர் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது. பிறரது அவமானத்தில் மகிழ்ச்சி கொள்பவர்கள் தாங்களும் அச் சந்தர்ப்பத்துக்காக காத்திருக்க வேண்டும்" என்றார் கவியரசன் கண்ணதாசன். ஏதாவது சொல்ல வேண்டும் என்பதற்காக, எதை என்றாலும் சொல்லக்கூடாது. அதுவே சிலநேரம் பலர் வாழ்வை எதுவும் இல்லாமல் பண்ணிவிடும். பொறுக்கப் பொறுக்க உண்பவனும், மறுக்க மறுக்க பேசுபவனும் வெறுக்கும் வரை விடமாட்டான்.

எம்முடைய செயல்களைவிட எம்முடைய பேச்சுக்கள் விரைவாகவே மற்றவர்களிடத்தில் பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றன. பெற்றோரின் சொல்முறை, செயல்முறைகள் எல்லாம் பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களில் செல்வாக்கு செலுத்தத் தவறுவதில்லை. காலப் போக்கில் இதுதான் வாழ்வியல்முறை என பிள்ளை விளங்கிக்கொண்டு அவற்றை உள்வாங்கி தன் வாழ்வோடு இணைத்துக்கொள்கின்றது. கூடியவரை நிதானமாகப் பேசி, நன்மையையே செய்ய நாம் ஒவ்வொருவரும் எடுக்கின்ற முயற்சி, நல்ல மாற்றங்களை வாழ்வில் உருவாக்கும்.

புகழ்பெற்ற ஓவியர் மைக்கேல் ஏஞ்சலோ தன் சிற்பக்கூடத்தில் மிகவும் கஸ்ரப்பட்டு ஓர் சிலையை அழகாக செதுக்கிக்கொண்டிருந்தார். அப்போது அவரது கூடத்துக்கு நண்பர்கள் மூவர் வந்தனர். இந்த சிலையின் மூக்கு சரியில்லை. கோணலாக உள்ளது இதை கொஞ்சம் சரிசெய்யுங்கள் என்றனர். அந்தச் சிலையில் எந்தக் குறையும் இல்லை என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், சரிசெய்வதுபோல் நடித்தார். மூக்கை சரிசெய்ததாக நினைத்து நன்றாக இருப்பதாகக் கூறினர். ஏஞ்சலோ நினைத்திருந்தால் என்னுடைய சிலையில் குறையா எனக் கேட்டிருக்கலாம். அங்கே நிதானமாக நடந்ததால் சண்டைக்கு வாய்ப்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படவில்லை. ஒரு கவனக்குறைவான வார்த்தை சர்ச்சையாய் முடியும். ஒரு கடுமையான வார்த்தை வாழ்க்கையை முறிக்கும். ஒரு கசப்பான வார்த்தை வெறுப்பை வளர்க்கும். சொற்கள் தேனீக்கள் போன்றவை. அவைகளில் தேனும் உண்டு. கொடுக்கும் உண்டு. இங்கு நிதானம்தான் முக்கியம். எல்லா மனிதரிடமும் ஒரு பலவீனம் உண்டு. ஒன்று கதைக்கவேண்டிய இடத்தில் மௌனமாய் இருத்தல். மௌனமாய் இருக்கவேண்டிய இடத்தில் நிதானமற்று பேசித்தொலைப்பது. நிதானமாகப் பேசுபவன் விதைக்கிறான். கேட்பவன் அதை அறுவடை செய்கிறான். "இனிய சொற்களையே பேசுங்கள். தானே உலகின் தலைவனாகலாம்" எனும் பொன்மொழியை சிசிரோ கூறியுள்ளார். எனவே பேச்சில் நிதானம் அவசியம்.

---

## பாராட்டு தெரிவித்தல்

முதல்வர் ஐயா, அவர்கட்கு!

தாங்கள் சந்நிதியான் ஆச்சிரமம்மூலம் பாகுபாடு இன்றி அனைத்து மாவட்டங் களிலுமுள்ள பின்தங்கிய நிலையிலுள்ள ஆலயங்கள் மற்றும் அறநெறி பாடசாலைப் பிள்ளைகளுக்கும் பெரும் உதவிகளைச் செய்து வருகின்றீர்கள். அதுமட்டுமன்றி வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்கள், வறுமையில் நோய்வாய்ப்பட்டுள்ளவர்கள், வசதியற்ற பாடசாலைப் பிள்ளைகளுக்கு பெருமதிமிக்க துவிச்சக்கர வண்டிகளையும் வழங்கியுள்ளீர்கள். மேலும் தொடர்ந்தும் பல உதவிகளை நேரடியாகச் சென்று வழங்கி வருகின்றீர்கள்.

மேலும் எனது வேண்டுகோளை ஏற்று எமது உதயபுரி கிராமத்துக்கும் 22 இலட்சம் ரூபாய்க்கு மேல் வழங்கி அறநெறி பாடசாலைக் கட்டிடம், மற்றும் எமது பகுதி கிராமிய பொது வைத்தியசாலைக்கும் மருந்துத் தட்டுப்பாடு காலத்தில் நோயாளரின் நன்மை கருதி முக்கிய மருந்து வகைகளை 5,00,000. 00 (ஐந்து இலட்சம்) ரூபாய் பெறுமதியான மருந்துகளை நேரில் வந்து ஒப்படைத்து மேலும் உதயபுரி கிராமத்தில் மலைமேல் உள்ள சிவன் கோவில் வசந்த மண்டபம் அமைப்பதற்கான நிதியையும் வழங்கியுள்ளீர்கள். இவற்றை நான் மற்றும் எமது கிராம மக்கள் என்றும் மறக்கமாட்டோம்.

மேலும் செய்துவரும் இந்த ஆன்மீகப் புனிதமான சேவைக்காக தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உயரிய விருதான தேசாபிமானி பட்டம் மற்றும் மனித உரிமைகளுக்கான மாகாண இயக்குனர் பதவி கௌரவம் கிடைத்தமைக்காக நானும் எனது கிராம மக்களும் தங்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மேலும் தாங்கள் ஆற்றிவரும் இந்த உத்தமமான பணி மேலும் தொடர்வதற்கு இறைவன் ஆசி வழங்குவார் எனவும் தெரிவித்துக்கொள்வதுடன் தாங்கள் பல்லாண்டு காலம் வாழவேண்டுமெனவும் வாழ்த்தி வணங்குகின்றோம்.

R.K. **கோணாமலை** J.P.
*உதய விருட்சம் சனசமூக நிலையம்*
*உதயபுரி, செல்வநாயகபுரம்,*
*திருகோணமலை.*

*வார்த்தையால் பேசுவதைவிட வாழ்ந்துகாட்டுவதே சிறப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

(தொடர்ச்சி...

## அத்தியாயம் - 16

## புருஷோத்தமன்

- திரு பூ. சோதிநாதன் அவர்கள் -

### 01) பிரபஞ்ச மரம்

கீதையின் பதினைந்தாவது அத்தியாயம் அதற்கே உரிய வழியில் மிக முக்கியமான ஒன்றாகும். அது பிரபஞ்சத்தின் விவரணத்தோடு ஆரம்பிக்கின்றது. வேரில் இருந்து மிகப் பிரமாண்டமாகப் பரந்து வளர்ந்துள்ள ஒரு மரத்தோடு பிரபஞ்சம் அங்கு ஒப்பிடப்பெறுகிறது. அந்த மரத்தின் வேரே பிரபஞ்சம். ஒரு நவீன வழியில் அந்த மரம்பற்றிய ஒப்பீடு மிகவும் சுவாரசியம் உள்ளதாக எம்முன் கொண்டுவரப்பெறுகிறது. அந்த ஒப்பீட்டுமுறை புதுமையாக வும், ஈடிணை அற்றதாயும், உயர்ந்த அளவில் அறிவுரை தருவதாயும் அமைகிறது. நாம் காணக்கூடிய எல்லாத் தோற்றப்பாடுகளுக்கும் அப்பால் அது விரிந்துள்ளது. அது மேலான ஆக்கத்திறன் அல்லது படைப்புத்திறன் உடையது. அதன் எல்லாம் கடந்த ஒரு நிலை பற்றிய கருத்தும் எமக்குத் தரப்பெறுகிறது. அதன் வேர் மேலும் கீழுமாக உள்ளதாய் ஒப்பிடப்படுகிறது. புலன்களினால் காணப்பெறுவதும், மனத்தினால் அறியப்பெறுவதுமான பல்வேறு பொருள்களில் அது உள்ளது. அது தனது கிளைகளைக் கீழ்நோக்கிப் படர விட்டுள்ளது. பிரபஞ்சம் என்னும் அந்த மரத்தின் வேரில் இருந்து அது தோன்றுகிறது. ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் அந்தக் காட்சியையும் அறிவையுமே அனுபவிக்கின்றனர். முழுப்பிரபஞ்சமும் மூலத்தில் வேறுபடுத்தி அறியமுடியாத முறையில் பூரணத்துவத்தில் உள்ளது. நாம் பார்க்கின்ற இந்த உலகில் உள்ள மரங்களில் இருந்து இந்தமரம் அதன் மூலத்தைப் பொறுத்தவரையில் வெளிப்படும் முறை வித்தியாசமானது. நாம் உலகத்தில் காணும் மரங்கள் கீழே வேர்களையும், மேலே ஆகாயத்தை நோக்கி வளரும் கிளைகளையும் உடையன.

### 02) மேல் நோக்கிய பார்வை

கடவுளைச் சிந்திக்கும்போதும், அவரைத் தொழும்போதும், எப்பொழுதும் நாம் ஆகாயத்தை நோக்கி மேலேயே பார்க்கின்றோம். இது ஒவ்வொரு தனிமனிதனிடத்திலும் உள்ள மனப்பாங்கு. நாம் அகத்திலும், புறத்திலும் மேல்நோக்கியே பார்க்கின்றோம். விழுமியங்களை மனக்கண்ணில் பார்ப்பதற்கு நாம் மேற்கொள்ளும் வழிகள் இவையே. எல்லாம் தெளிவற்றும், புதிராகவும் தோன்றும்போது அவற்றின் இரகசியத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதை வெளிப்படுத்த நாம் ஆச்சரியத்தில் மேல்நோக்கிப் பார்க்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிரபஞ்சம் எவற்றைக் கொண்டிருந்தாலும் அது பிரிக்கமுடியாத பிரமத்தில் இருந்தே தோன்றியது. நாம் எவ்வகையில் பார்த்தாலென்ன, உணர்ந்தாலென்ன அவை யாவும் அந்த ஒரு மூல வேரில் இருந்தே வருகின்றன. பார்க்கமுடியாதபடி ஒரு விதையில் மரத்தின் பல்வேறு கிளைகளும் கொப்புகளும், இலைகளும், பூக்களும், பழங்களும் மறைந்தே இருக்கின்றன. அதேபோல இப்பிரபஞ்சம் பலவிதமாகப் பிரிந்து விரிந்து இருந்தாலும் அது பிரமத்திலேயே தனது மூலத்தைக் கொண்டிருக்கின்றது. இந்தப் பிரபஞ்சம் வேறெங்கிலும் இருந்துவர முடியாது. பிரமத்தினது பிரபஞ்சம் என்ற வெளிப்பாட்டில் நாமும் சில பகுதிகளே. இந்தப் பிரபஞ்சம் என்னும் மரத்திலேயே நாமும் இருந்துகொண்டு எல்லாவற்றையும் ஒரு புதிராகப் பார்த்துககொண்டு இருக்கின்றோம்.

## 03) வேத உபநிடதங்கள்

பிரபஞ்சத்தை ஒரு மரத்தோடு ஒப்பிடுவது கீதையின் ஒரு புதிய கண்டுபிடிப்பு அன்று. அந்தப் படிமம் கடோபநிடதத்திலும் இருக்கின்றது. அங்கு பிரபஞ்ச மனத்தை விவரிப்பதற்கு அதேவிதமான வார்த்தைகளே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இருக்கு வேதத்திலும் இந்தப் பிரபஞ்ச மரத்தைப்பற்றிய ஒரு குறிப்பு வருகிறது. ஒரு மரத்தில் இரண்டு பறவைகள் வாழுகின்றன என்ற தகவல் அங்கே எமக்குத் தரப்பெறுகின்றது. கீதை அம் மரத்தில் பறவைகள் வாழுகின்றன என்பதைக் குறிப்பிடாதபோதும், எமக்கு முன் மிகப் பரந்து விரிந்து தோன்றும் இந்த மரம் பற்றிய விவரம் எமக்குத் தரப்பெறுகிறது. எல்லா வகையிலும் ஒன்றுபோல் மற்றொன்றில்லாத பல்வேறு வகைப் பொருள்களால் இப்பிரபஞ்சம் விரவி உள்ளது. இந்த மரத்தின் விதையான மிக உயர்ந்த இருப்பினால் அப்பொருள்கள் யாவும் தொடர்புபடுத்தி இணைக்கப்பெற்றிருக்கின்றன. நாம் இந்த உலகில் பார்க்கும் பிற விதைகளின் மிகப் பரந்த தன்மையை அவற்றின் கிளை முதலானவற்றைக் கொண்டு அறிய முடிவதில்லை. ஆனால் ஒரு மரத்தின் ஒவ்வொரு பகுதியினதும் சாரமாக விதை உள்ளமையை நாம் ஊகித்து அறிந்துகொள்ளலாம். எனினும், நாம் மரத்தை மட்டும் பார்க்கிறோமே அன்றி விதையைப் பார்ப்பதில்லை. இம் மூல விதை மரத்தின் ஒவ்வொரு சிறிய பகுதியிலும் கூட நீங்காமல் விரவி இருக்கின்றது. இந்த விதை அல்லது பிரமமாகிய மூலவேரின் சாரமாயே பிரபஞ்சத்திலுள்ள பல்வகைப் பொருள்களும் தோன்றி இருக்கின்றன. ஆனால் அவை யாவும் எமக்குப் புதிராகவே உள்ளன.

## 04) புதிரான பிரபஞ்சம்

பிரபஞ்சம் எங்கே தொடங்கி எங்கே முடிகிறது என்பதை நாம் அறியோம். அதன் மூலத்தையும் நாம் அறியோம். இந்தப் பிரபஞ்சம் எல்லையற்றது. எல்லையற்ற பிரமத்தில் இருந்தே எல்லையற்ற இப்பிரபஞ்சம் தோன்றி உள்ளது. எமக்கு முன்னால் காட்சி அளித்துக் கொண்டிருக்கும் பல்வகைப் பொருள்களும் எல்லையற்றனவே. அது தன்னை வெளியிடும் புதிரும், மறைவும் உள்ள வழியும் எல்லையற்றதே. எந்த நேரத்திலும் மனிதனால்

*ஆயிரம் உறவுகள் தரமுடியாத பலத்தை ஒரு அவமானம் பெற்றுத்தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துகொள்ள இயலாதபடி உள்ள இந்தப் படைப்புச் செய்முறையும் ஒரு பெரிய புதிரே. இந்தப் பிரபஞ்சத்தின் புதிரை விளங்கியவராக எவரும் தன்னைக் கூறிக்கொள்ளமுடியாது. எல்லா அறிவும், எல்லாச் செயலும் தோன்றியுள்ள எல்லாமும் பிரபஞ்ச மரத்துக்கு உள்ளேயே இருக்கின்றன. நாம் எவ்வாறு இருக்கின்றோமோ, நாம் எவற்றை அறிகின்றோமோ அவை யாவும் இந்த மரத்தினது வளர்ச்சியின் தோற்றப்பாட்டில் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் தளைப்பட்டிருக்கின்றன. எனவே எமக்கு அப்பாலுள்ள படைப்பவனை அல்லது தோற்றப்பாட்டின் மூலத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய நிலையில் நாம் இல்லை.

## 05) இரு பறவைகள்

இரு பறவைகளின் கருத்துப்பற்றிக் கூறும்போது அது பற்றிய விவரணம் வேதத்திலும், உபநிடதத்திலும் இடம்பெற்றிருப்பதாக முன்னர்க் குறிப்பிடப்பெற்றது. அந்த மரத்தின் கிளைகளில் வாழ்வதாக கருதப்பெறும். அப் பறவைகள் இரண்டும் கடவுளும், மனிதனுமே. அந்தப் பறவைகள் வித்தியாசமான வகையின. பொதுவாக மரத்திலுள்ள பறவைகள் அம் மரத்திலுள்ள பழத்தை உண்ண ஆவலாக இருக்கும். ஆவலோடு தாம் உண்ண விரும்பும் பழங்களைத்தேடி அவை ஒரு கிளையில் இருந்து மற்றோர் கிளைக்குத் தாவுவதை நாம் பார்த்திருக்கின்றோம். ஒரே மரத்தில் ஒரே கூட்டில் இரண்டு பறவைகள் வாழுகின்றன. அவற்றுள் ஒரு பறவை அந்தப் பிரபஞ்ச மரத்தின் பழங்களை உண்ணுவதில் ஆர்வமாக ஈடுபட்டிருக்கின்றது. அப் பறவை அவ்வாறு உண்ணுவதனால் வேறு எதனையும் அறிய முடியாமல் இருக்கின்றது. அது தனக்கு அருகில் இன்னொரு சிநேகிதப் பறவை இருப்பதைக் கூட அறிவதில்லை. நாம் சுவையான விருந்தை இரசித்து உண்ணும்போது அதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்துவதால் எமக்கு அருகில் இருந்து உண்பவரைக்கூட மறந்து விடுவது சாத்தியம். புலன்களுக்குப் பொருள்களின்மீதுள்ள கவர்ச்சி அப்படிப்பட்டதாகும். எனவே, மனிதன் என்னும் பறவை வாழ்க்கை என்னும் இனிய பழங்களைச் சுவைப்பதில் தன்னைப் பூரணமாக ஈடுபடுத்திக்கொண்டு இருக்கிறது. அது மற்றப் பறவையை முற்றும் அறியாதுள்ளது. அந்த மற்றப் பறவை சுவையானதோ, சுவையற்றதோ எதிலும் ஈடுபடாது எல்லாவற்றையும் வெறுமனே அவதானித்துக்கொண்டு இருக்கின்றது. கடவுள், மனிதன் என்ற இரண்டு பறவை களும் ஒரே இடத்திலேயே இருக்கின்றன. அத்துடன் அந்த மரம் பிரபஞ்சமாகும். அது உடம்போ, மக்கள் சமூகமோ அன்று. அது ஒரு அணுவாகக்கூட இருக்கலாம். பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும் மற்றைய ஒவ்வொன்றினதும் பண்புகளைக் கொண்டிருக்கிறது. எனவே கடவுளும் மனிதனும் அடிப்படையில் வித்தியாசமான தத்துவங்கள் ஆகும். அவை இரண்டும் பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வொரு துளிகளிலும் இருக் கின்றன. மனிதனின் தளை, வாழ்க்கை என்ற பழத்தை உண்ணுவதில் தங்கியிருக்கின்றது. மனிதனின் விடுதலையானது கடவுள் என்ற அருகிலுள்ள மற்றப் பறவையை அறிவதால் கிடைக்கிறது. எதனையும் உண்ணாது பார்த்துக்கொண்டு மட்டும் இருக்கின்ற பறவை எல்லாப் பொருள்களிலுமுள்ள விடுதலைபெற்ற ஆன்மாவாகும். அவை இரண்டும் இந்த

*தீமை செய்வதற்கு மட்டும் பயப்படு. வேறு எந்தப் பயமும் உனக்கு வேண்டாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பிலேயே இருக்கின்றன. கடவுள் எமக்கு உள்ளேயே இருக்கின்றார். நாமும் இந்த உடம்பிலேயே இருக்கின்றோம். இந்த முழுப்படைப்பிலும் அவை இரண்டும் எங்கும் நிறைந் திருக்கின்றன. தவிர்க்கப்பட்ட பழத்தை உண்ணுவதே மனிதனின் தளைக்கான காரணம். அந்த மரம் பார்க்கக்கூடியதாக இருக்கும்வரையே அந்த மரத்தில் பழங்கள் இருக்கும். அதனால் அந்தப் பழங்களில் உள்ள ஆசையை முற்றாக விலக்குவது முடியாமல் இருக்கிறது.

### 06) பற்றின்மை

பற்றின்மை என்னும் கோடரியைக் கொண்டு அந்த மரத்தின் வேரை வெட்டி அதனை வீழ்த்த வேண்டும் எனக் கீதை எமது எச்சரிக்கின்றது. பற்றினாலேயே அம் மரம் வளர்கிறது. எனவே, பற்றின்மையால் அம் மரம் அழிந்து போகிறது. இந்தப் பிரபஞ்சம் அகங் காரங்களின் ஒரு தொகுதியாகும். சுய தீர்மானங்களின் மையங்களாக இப் பிரபஞ்சம் உள்ளது. அத் தீர்மானங்கள் செயல்கள் ஆகின்றன. அச் செயல்களின் பலன்களை அனுபவிப் பதன் ஊடாக அவை நிறைவேறி அந்த மையங்கள் நிலைபெறுகின்றன. ஆசை அறும்போது பிரபஞ்சமும் இல்லாது நீங்கி விடுகிறது. அதற்குமேல் அதனால் வாழமுடியாது. எவ்வாறு துணியில் இருந்து நூல்களை எடுத்தால் துணி இருக்காதோ அவ்வாறே ஆசை இன்றேல் பிரபஞ்சம் இல்லை. எனவே, பிரபஞ்சம் பொருள்களினால் அன்றி ஆசைகளினால் ஆனதே. பிரபஞ்சம் என்ற குறுக்கும், நெடுக்குமாக உள்ள நூல்கள் மனிதர்கள் கொண்டுள்ள ஆசை களே. எவ்வாறு நூல்கள் இன்றித் துணி இல்லையோ அவ்வாறே மனிதர்களைவிட அவர் களுக்கு வெளியாகப் பிரபஞ்சம் இல்லை. இந்தப் பிரபஞ்சத்தின் வேரை வெட்டுவது இலகு வான ஒரு செயல் அன்று. அதனை வெட்டுவதற்கு அதன் கட்டமைப்பைப் பெரிதும் புரிந்துகொள்ள வேண்டி இருக்கின்றது. தோற்றப்பாட்டின் வேரை வெட்டுவது எமது வேரை வெட்டுவதாகவே அமையும். அது அகங்காரம் என்ற மனதை வெட்டி வீழ்த்துவதாகும். ஒருவர் தனது சொந்த அகங்காரத்தை இல்லாமல் செய்வது போன்ற கடினமான வேலை வேறேதும் இருக்கமுடியாது. (தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யூலை | 31 | ஆடி | 15 | வியாழன் | மயில்வாகனம் சுவாமிகள் |
| ஆக | 01 | ஆடி | 16 | வெள்ளி | சுந்தரமூர்த்தி நாயனார் |
| ஆக | 08 | ஆடி | 23 | வெள்ளி | பட்டினத்தடிகள் |
| ஆக | 21 | ஆவ | 05 | வியாழன் | நீலகண்ட சிவாச்சாரியார் |
| செப் | 20 | புர | 04 | சனி | அருநந்தி சிவாச்சாரியார் |
| செப் | 24 | புர | 08 | புதன் | சங்கரபண்டிதர் |

*எதையும் தேவையில்லை என்று விட்டுவிடாதே. அனைத்தையும் கற்றுக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயிகளே சீர்தூக்கிப் பாருங்கள்

**– திரு முருகவே பரமநாதன்** அவர்கள் –

உலகிலே நடைமுறையில் உள்ள சமயங்களிலொன்று சைவம். மூத்த சமயமான இதற்கு முனைவர்களில்லை. முன்னவனாம் சிவனே இதன் முழுமுதற் கடவுள். தொன்மை நிறை சாத்திரங்களும், தோத்திரங்களும் பக்தி இலக்கியங்களும் நிறைய உண்டு. பக்தி சார் சமைய இலக்கியங்களும் இன்றுவரை எழுகின்றன. சமய ஞானிகளும் காலத்துக்குக் காலம் தோன்றுகிறார்கள். ஆனால் பல சமயங்களின் நெருக்கீடுகளும், எதிர்ப்புகளும் இல்லாமல் இல்லை. சமய மாற்றம் என்ற பூதாகாரம் எம்மைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கு கிறது. ஆலயச் சந்தைகளை அபிவிருத்தி செய்யும் அளவிற்கு சைவ அவலங்கட்கு முகம் கொடுப்பார் இல்லை. இந்த மிலேனிய காலத்திலே சைவம் எதிர்நோக்கும் சவால்களை, ஊடுருவல்களை ஒவ்வொரு சமயிகளும் சீர்தூக்கிப் பார்ப்பதாயில்லை. சைவம் கூறுபோடப் படுவதும், குறிக்கோள்களை இழந்து பரசமயத்தின் பாதையிற் சேர்வதும் தம் சமயத்தை தாங்காமல் உதாசீனமாய் வாழ்வதும் - சைவத்தை எங்கே கொண்டுபோய்விடும் என்பதை எள்ளத்தனையும் உளத்திற்கொள்வதாய்த் தெரியவில்லை. பூசை, புனற்காரம், சடங்கு, கிரியை, விழா போன்ற ஆடம்பரமன்று சமயம். சமய வழியில் தம்மை இட்டுச்சென்று அடுத்த பரம்பரையையும் நெறிப்படுத்துவதே நம் கடமை. ஓ ஓ என்று கல்யாண விழா, பிறந்ததின விழா, பூப்புனித நீராட்டு விழா என்று சமயம் தன்னை அவற்றிலே கரைத்து விடுகிறது. சமயிகள் சிந்தனையின்றி அதிலே கரைந்தும் விடுகிறார்கள். ஒழுக்கங்கள், ஒழுகலாறுகள், கோட்பாடுகள், ஆசார அனுட்டானங்கள், நடைமுறைகள் பெரியார் உபதேசங் கள் கைநழுவிப் போகின்றன. செவ்வியநெறியிற் தம்மை வழிப்படுத்தி, சீரிய சமய வாழ்க் கையை மேற்கொண்டு செம்மையான தவவாழ்வு காண்பதே சமய இலக்கு. எல்லாவற்றையும் தேட்டாக் கூறாய் விட்டுவிட்டால் நம் சமயம் என்னாகும். நம் விழுமியங்களென்னாகும். கடந்த சில தசாப்தங்களாகச் சைவம் எதிர்நோக்கும் சவால்கள் பலவாகத் தென்படுகின்றன. இவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து சைவக்கட்டுமானங் குலையாமற் பேணுவது ஒவ்வொருவர் கடமையாகும்.

எண்பதுகளின் பின்னேற்பட்ட நெருக்கீடுகளால் வீடிழந்து வாசல் இழந்து, சொத்து இழந்து, சுகமிழந்து, உயிரிழந்து, உடைமையிழந்து, உறவிழந்து, அவயமிழந்து, உதவியும்கூட இழந்து பராபரியான மக்களின் நலன்பேணச் சைவம் தவறிவிட்டது இந்த அபலைகட்கும் அகதிகட்கும். இருப்பிடம், உடை, உணவு, பணம், மருந்து போன்ற பன் முகப்பட்ட உதவிகளைக் கிறீத்தவம் முன்னின்று செய்தது. அதன்மூலம் திருப்தி கண்ட மக்கள் மதம்மாறினார் என்றால் தப்பேது. சைவம் தன்மக்களின் அவலங்களைப் போக்காமல் குளிர்காய்வதிலே கண்ணும் கருத்துமாய் இருந்தது. நன்மையடைந்தோர் நன்றியுள்ளவர்களாய் வாழ முற்பட்டனர். தொடர்ந்தும் அவர்கட்கு பணஉதவி, வைத்திய உதவி, கல்விசதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகன வசதி என்று பல உதவிகள் கிடைத்தன. சைவ உதவியற்ற குழந்தைகளை பராமரிக்கப் பல சைவஸ்தாபனங்கள் பெரிதும் சிரமப்படுகின்றனவே. என்ன செய்தது சைவம். குறுகிய காலத்துள் சைவம் மக்களின் நம்பிக்கையையும், ஆதரவையும் படிப்படியாய் இழந்தும் வருகிறது. இன்று வர்ணபேதம் பேசும் கூட்டம் இருக்கவே செய்கிறது. இதுவும் மக்களை நேயமுடன் பார்க்கத்தவறிய நிலைதான் மனிதநேயம் இழந்த ஒரு சமயம் நமக்கு ஏன் என்ற கேள்வி பலரை மதமாற்றம் செய்துவிட்டது. மிலேனியம் என்று பேசும் இருபதாம் நூற்றாண்டிற் சைவம் முகங்கொடுக்கும் சவால்களைப்பற்றிச் சிந்திக்காத சைவமும், அதுசார் தாபனங்கள், சபைகள், இயக்கங்கள், அமைப்புக்கள், பிராமணீயம், ஆலயம், சமயவாதிகள், விழாக்கள், சமய சஞ்சிகைகள், நிதியங்கள் இருந்தும் இல்லா தனவே. வெறும் பஞ்சாங்கம் அடித்தாலும் விரத நிர்ணயங்களில் மாறுபட்ட கருத்துக்களும், இறைவன் படம்போட்டுக் கலண்டர் வெளியிடலும், கும்பாபிஷேகச் சால்வை அடித்தல் போன்ற தொழிற்பாடுகளும் சைவத்தை இழிவுசெய்வனவாகும். இன்று வெவ்வேறு சமய அமைப்புக்கள் சைவத்தை நலிவடையச் செய்கின்றன. இவற்றில் இருந்து விடுபட என்ன செய்தது சைவம். நம் சைவத்தைக் கூறுபோடும் இன்றைய நடைமுறைகள் இவை. இது எந்தப் பகைமை உணர்வோடும், காழ்ப்போடும் குறிப்பிடப்படவில்லை. உண்மை நிலையிது.

ஈழத்தில் மட்டுமன்றி வெளிநாடுகளில் வதியும் சைவசமயிகள் மத்தியிலும் பல மாறுபாடுகளை ஏற்படுத்தியுள்ளன. தெலுங்கு, இந்துஸ்தான் போன்ற மொழிப்பாடல்கள் சபையிலே இடம்பெற திருநெறிய தமிழும் சைவமும் ஓரங்கட்டப்பட்டுவிட்டன. தமிழிலே சொற்பொழிவாற்றல் அருகி ஆங்கிலத்தில் பேசும் நாகரிகம் தலைதூக்கியுள்ளது. வெளிநாடு களில் திருக்குறள், தேவார திருவாசகம் எல்லாம் ஆங்கிலத்திலே எழுதப்பட்டுப் பாடமாக்கிப் பேசிப் பரிசில்கள் பெறுகிறார்கள். இதனாலே பொருள் விளக்கம், பக்தி உணர்வு, இறை ஈடுபாடு, ஆன்மீக விழிப்புணர்வு, ஆன்ம ஈடுபாடு, விடுதலைவருமா. சினிமாப் பாடல்களை அப்படியே ஆங்கிலத்தில் எழுதுவித்துப் பாடி சபைகளிலே கைதட்டலுக்குள்ளாகும் பல பாடகர்கள் உளர். உண்மையிலே இவர்கள் தமிழை எழுதவோ, பேசவோ, வாசிக்கவோ தெரியாத தமிழர்கள்தான்.

சைவத்தில் இருந்து மாறிய கிறீத்தவர்கள் பைபிளைக் கற்றுக்கொள்கிறார்கள். வாசிக்கிறார்கள். படிக்கிறார்கள். உண்மைகளை உபதேசங்களை உள்வாங்குகிறார்கள். ஆலய ஆராதனை, ஒழுங்கு, ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்கிறார்கள். குருமாரின் உபதேசங் களை ஏற்று தம்மை வழிப்படுத்துகிறார்கள். உடையமைப்பு, பழக்கவழக்கங்கள், நாகரிகத் தைக் கற்றுக்கொள்கிறார்கள். சமயப் பண்பாடு, நாகரிகம், சமுதாய நெறி என்பவற்றை உள் வாங்குகிறார்கள். பெரிய சபைகளிலே எப்படி மரியாதையைப் பேண வேண்டும். எப்படி நடக்கவேண்டும் என்பதை அனுபவரீதியாகப் பெற்றுக்கொள்கிறார்கள். சமயத்துக்கு, கிறீத்தவ சமூகத்துக்குக் கட்டுப்படுகிறார்கள். எளிமையான செலவு குறைந்த கல்யாண சடங்குகளாற் கவரப்படுகிறார்கள். சமூக சேவைகள், மரணச் சடங்குகள் எளிமையாயும், ஆத்மீகதாற்பரியம் நிறைந்ததாயும் முன்னடத்தப்படுகிறது. தேவாலயம் அவர்களை வழிநடத்துகிறது. இன்னோரன்ன

*பார்த்தும் பார்க்காமல் செல்பவர்களை கண்டும் காணாமல் சென்றுவிடுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புகளால் ஈர்க்கப்படும் சைவர்கள் மதம் மாறுகிறார்கள். இன்றைய சைவ ஆலயங்களும், அந்தணரும், அறங்காவலரும் என்ன செய்கிறார்கள். சைவ சமுதாயம் தம் வணக்கத்தலங்களால் என்ன நன்மையைப் பெறுகின்றது. கொஞ்சம் இப்படியும் சிந்தித்துப் பார்ப்போமே. வெறும் சடங்குகள் நிரம்பி வழியும் ஆலயங்கள் மக்களை மையமாக்கி இயங்குகின்றனவா வருவாயைப் பெருக்கும் வாரியங்களாய் இவை மாறிவிட்டனவே. சைவ சமயத்தை வளர்ப்பதற்குப் பதில் தம் வயிற்றை வளர்க்கும் நிறுவனங்களாய் இறை இல்லங்கள் மாறிவிட்டனவே. சமயத்தோடு சாதியை இணைக்கும் சமயம் இனி வாழாது வளராது. வளர்ந்து வரும் இளஞ்சமுதாயத்தின் விஞ்ஞானபூர்வமான வினாக்களுக்கு விளக்கம் சொல்லச் சைவசமயம் தன்னைத் தயார்பண்ணிக்கொள்ளாவிட்டால் எதிர்காலச் சமயநிலை என்னாகும் என்பதையும் இன்றைய சமுதாயம் சிந்தித்துத் தொழிற்படட்டும்.

## தேவர் துயர் நீத்த சந்நிதியான்

*நல்லருள் நல்கிடும் சந்நிதி வேலனவன்*
*அல்லலுற ஈவான் அருள்.*

*வெள்ளமென பக்தர் அலைமோதும் வேளைதனில்*
*உள்ளமதில் நிற்பான் உறைந்து.*

*தேவர் துயர்நீத்த சந்நிதி வேலனாம்*
*சேவற் கொடியோனைச் சேர்.*

*முருகா வெனநினைக்க சந்நிதி மைந்தன்*
*தருவான் நிறைவாய் எமக்கு.*

*இனிதாக ஆற்றங் கரையிருந்து காண்பாய்*
*இனியும் அலைய விடாது.*

*பாடியே சந்நிதி வேலனை போற்றுவோரை*
*நாடியும் வாரா வினை.*

*குமரனே ஆற்றங் கரைவந்தேன் நீந்தி*
*அமரனே எனையாட் கொள்ளு.*

***-சி. சாந்தநாதன்.***

*யார் இழப்பதற்கு பயப்படுகின்றார்களோ அவர்களே தோல்வி அடைந்தவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 97

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 நீர்மகளாள் எமக்களித்த நீரளவு சிறிதெனினும்
நாம் வாழ உஊவளிக்க அவள் எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவளை
என்றென்றும் வணங்கிடுதல் இறையிருப்பை வணங்கலாகும்.

02 தீ மகளாள் எமக்களித்த தீயளவு சிறிதெனினும்
எம் முன்னே தோன்ற அவள் எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவளை
தீபமென வணங்கிடுதல் இறைவயிற்றை வணங்கலாகும்.

03 காற்றழகாள் எமக்களித்த காற்றளவு சிறிதெனினும்
எம்மூச்சுள் அவள் புகுதற் கெண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவளை
எமக்குள் வணங்கிடுதல் இறை நெஞ்சை வணங்கலாகும்.

04 வான்மகளாள் எமக்களித்த அற்புதங்கள் சிறிதெனினும்
என்றுமவள் எமைக்காக்க எண்ணியதே பெரிதாகும்
எண்ணியதைப் பெரிதென்று எண்ணியே நாமவளை
சிரம்தாழ்த்தி வணங்கிடுதல் இறைமுடியை வணங்கலாகும்.

05 கடவுளின் பெயரைச் சொல்லி கடமைகள் தவறுவோர்க்கு
கடவுளார் ஒருபோதும் கருணைமழை பொழியமாட்டார்
கடமையே கடவுளென்று கடமையைச் செய்வோர்க்கென்றும்
கடவுளார் இறங்கிவந்து கடமைகள் அவரே செய்வார்.

06 சமூகத்தின் பெயரைச்சொல்லி ஒழுக்கங்கள் தவறுவோர்க்கு
சமூகத்தார் ஒருபோதும் துணையாக இருக்கமாட்டார்
ஒழுக்கமே சமூகமென்று ஒழுக்கமாய் நடப்போர்க் கென்றும்
சமூகத்தார் பரிந்து வந்து பணிவிடைகள் தாமே செய்வார்.

*உங்களை விமர்சிப்பவர்கள் மட்டுமே உங்களை பலம் வாய்ந்தவராக மாற்றமுடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பெற்றோரின் பெயரைச்சொல்லி தம்வாழ்வை ஓட்டுவோர்கு
உற்றார்கள் ஒருபோதும் அனுசரணை காட்டமாட்டார்
தம்பேரைப் பெற்றோர் சொல்ல வைக்கின்ற மக்கட்கென்றும்
பற்றோடு பலரும் வந்து பணிவிடைகள் செய்திடுவர்.

08 பதவியின் பெயரைச் சொல்லி பலன்பெற எண்ணுவோர்கு
பதவியை வழங்கியோர்கள் பரிந்துரைகள் செய்யமாட்டார்
பதவியே பலனாமமென்று பதவியை மதிப்போர்கென்றும்
பதவியை வழங்கியோர்கள் பலன்பல செய்திடுவர்.

09 பரம்பரையின் பெயரைச்சொல்லி அரங்கேற விரும்புவோர்கு
கரம்நீட்டி மற்றவர்கள் ஆதரவு நல்கமாட்டார்
தரமான கொள்கையோடு தரணிமிசை வாழ்வோர்கென்றும்
சிரம் தாழ்த்திக் கரம்கூப்பிப் பிறர் கடமை செய்திடுவர்.

10 காரணம் ஒன்றைச்சொல்லி காலத்தைக் கடத்துவோர்கு
காரியம் அதுவேயாகி ஆழவேர் ஊன்றிவிடும்
உள்ளதை உள்ளபடி உரைத்திடும் உள்ளத்தார்கு
உள்ளது எல்லாம் வாழ்வில் உயர்வாயே அமைந்துவிடும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| **காசுக்கட்டளை** | **காசோலை** |
|---|---|
| செந்திவேல் மோகனதாஸ் | செந்திவேல் மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 021 226 3406 | பருத்தித்துறை. |

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*மனிதனின் பண்புகள் சந்தர்ப்பங்களால் உருவாக்கப்படுவன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமானின் அன்பு

– திருமதி பொ. திலகவதி அவர்கள் –

உலகத்திலே பல சமயங்கள் இருக்கின்றன. அவற்றுள் சைவசமயம் அநாதி காலங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றது. சைவசமயமொன்றே நம்மை பிறவித் துன்பத்தினின்றும் நீக்கி கடவுளோடு சேர்க்கின்றது. பிதா இன்னாரென்று குழந்தைக்கு காட்டுபவள் தாய். அதுபோல் குழந்தைகளாகிய நமக்கு கடவுளை காட்டுவது சைவசமயமாகிய தாய். நம்மைப்பெற்ற தாயினும் பார்க்க இந்தத் தாயை நாம் நேசித்து இதை யாவரும் அறியச்செய்வது நமது கடமை. சைவப்பிள்ளைகளை சைவப் பள்ளிகளில் படிக்கச்செய்ய வேண்டும். சைவப்பள்ளிக்கூடங்களிலே ஒவ்வொரு நாளும் சமயத்தைப் போதிக்க வேண்டும். முதியோர்களுக்கு சைவப் பிரசங்கங்கள் செய்ய வேண்டும்.

மனிதப்பிறவி நமக்குக் கிடைத்தது நாம் செய்த புண்ணியம். மனிதப் பிறவியிலும் குருடராய், முடவராய் பிறவாமல் சிவபெருமானோடு சேர்க்கத்தக்கதாகிய சைவசமயத்திலே பிறந்தது பெரிய பாக்கியம். சிவனே பெருந்தெய்வம், ஒரே தெய்வம். வாழ்க்கை நிலையற்றது.

இறைவன் பக்தர்களை மூன்றுவிதமாக பிரித்துக்கொள்கிறார். கீழ்நிலையிலிருக்கும் பக்தர்கள் இறைவனை சொர்க்கலோகத்தில் பார்க்கிறார்கள். நடுநிலையில் உள்ள பக்தர்கள் இறைவனை தங்கள் இதயத்தில் தரிசிக்கிறார்கள். உயர்நிலையில் இருக்கும் பக்தர்கள் இறைவனை எல்லாவற்றிலும் பார்க்கிறார்கள். படகு நீரில் மிதக்கலாம். ஆனால் படகுக்குள் நீர் நுழைந்துவிடக்கூடாது. அதுபோல் மனிதன் உலகில் வாழலாம். உலக ஆசை அவர்கள் உள்ளத்தில் நுழைந்துவிடக்கூடாது. தீமையிலிருந்தும் துன்பத்திலிருந்தும் விலகினால் எங்களுக்கு இறைவன் காட்சி தருவார். சிவபெருமான் அடியார்களது அஞ்ஞானத்தைப் போக்குகிறார். தீபம்போன்று விளங்குகிறார்.

ஆன்மாக்கள் பாசங்களினால் அடையும் துன்பங்களைக் குறித்து சிவபெருமான் இரங்குகிறார். அவருடைய இரக்கம் அவருடைய திருக்கண்களில் இருந்து சொரிந்து கொண்டிருக்கின்றது. அது இரக்கத்தைக் குறிப்பது. அதுதான் உருத்திராட்சமணி. சிவபெருமான் தூங்க மாட்டார். அவர் ஒரு நிமிடம் தூங்கினால்கூட உலகம் இருளில் மூழ்கிவிடும். அவர் எப்போதும் விழித்துக்கொண்டே இருக்கிறார். குழந்தைகளாகிய நாம் தூங்கிக்கொண்டிருக்கும்போது நம்மைப் பாதுகாத்து வருகிறார். இறைவன் நாம் தூங்கும்போது நமக்கு சேவைசெய்து கொண்டிருக்கிறார்.

ஒரு பக்தனின் அன்பு பூவிலிருக்கும் தேனைப்போன்றது. வெளியே நமக்குத் தெரியாது. இறைவனின் அன்பு என்பது ஒரு தேன்கூட்டில் இருக்கும் தேன் போன்றது. பல்லாயிரக்கணக்கான தேனீக்கள் லட்சக்கணக்கான பூக்களிலிருந்து எடுத்து சேர்த்து வைத்திருக்கக்கூடியது. அந்தத் தேன்கூட்டில் இருக்கும் தேன், அதுபோல் பக்தனின் அன்பைவிட பலமடங்கு அதிக மானது இறைவனின் அன்பு. இந்த அன்பை நாங்கள் அடையமுடியாமல் தடுப்பது ஆணவம்.

*புத்திசாலித்தனமும் தன்மானமும் ஒன்றையொன்று எதிர்த்துக்கொண்டே இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆணவத்தை வெல்வதற்கு துணையாயுள்ளது சிவபெருமானுடைய திருவருளாம். ஆன்மா எப்போது உண்டோ அப்போது ஆணவமும் அதனோடு உள்ளது. ஆதலால் அதற்கு சகசமலமென்று பெயர்.

உயிருக்கு ஆன்மா என்று பெயர். நீ என்று குறிப்பதும் ஆன்மா. அவன் குறிப்பதும் ஆன்மா. நான் என்று குறிப்பதும் ஆன்மா. நாங்கள் எல்லோரும் ஆன்மாக்களே. ஒருவன் இறந்துபோனான் என்பதின் கருத்தென்ன? அவனின் ஆன்மா தான் இருந்த உடம்பினின்று நீங்கிப் போய்விட்டதென்பதே. எனவே ஆன்மா அழியவில்லை என்று விளங்குகின்றது. ஆன்மாக்களாகிய நாங்கள் ஒரு காலத்தும் அழிவதில்லை. ஆன்மாவானது காலத்திற்குக் காலம் எடுத்துக்கொள்ளும் உடம்பே அழிந்துபோவது. ஆன்மா அநாதியாதலால் அதைக் கட்டுப்படுத்தியிருக்கும் ஆணவ மலமும் அநாதியாகும். இந்த அநாதியான ஆணவத்தை நீக்குவதற்காக சிவபெருமான் ஆன்மாக்களுக்கு பிறவிகளைக் கொடுக்கிறார். வியாதி உடம்பை பிடித்து நிற்பதுபோல ஆணவமானது ஆன்மாவைப் பிடித்து நிற்கின்றது.

ஒரு வைத்தியன் வியாதிக்காரனை வைத்தியசாலையில் வைத்து மருந்து கொடுத்து மாற்றுவதுபோல் சிவபெருமான் ஆணவமாகிய வியாதியை நீக்குவதற்காக உடம்பாகிய வைத்தியசாலையில் இட்டு திருவருளாகிய மருந்தைக் கொடுத்து மாற்றுகிறார். இந்த சரீரத்தை தந்த சிவபெருமானை எவ்வளவாக நாங்கள் நேசிக்கவேண்டும். ஒரு குழந்தைக்கு பல பேர் இருந்தாலும் தாய் அதைப் பார்ப்பதுபோல அன்பாகப் பார்க்க முடியுமா? பெற்ற தாய் இந்தப் பிறவியில் மாத்திரம் காப்பாள். இந்தப் பிறவி முழுவதும் காப்பாற்ற அவளுக்கு வல்லமையில்லை. சிவபெருமானே நாம் எத்தனை பிறவி எடுத்தாலும் ஒவ்வொரு நிமிஷமும் அன்பு பொழிந்து கொண்டிருக்கிறார்.

நாம் பெற்ற தாயை நேசிப்பதிலும் பார்க்க எத்தனை கோடி பங்கு அதிகமாக சிவபெருமானை நேசிக்க வேண்டும். நாங்கள் இங்கே பிறந்து பாடுபடுவதெல்லாம் நம்மைப் பிடித்திருக்கும் மலங்களினின்று நீங்கி சிவபெருமானோடு சேர்ந்து பேரானந்தத்தை அடைவதற் காம். நாங்கள் சிவபெருமானை தியானிக்க வேண்டும். அல்லது தேவாரம், திருவாசகம், சிவனடியார் சரித்திரம் என்பவற்றை வாசிக்க வேண்டும். இப்படிச் செய்தால் ஆன்மாவைப் பற்றியும் சிவனைப்பற்றியும் உள்ள எண்ணம் அதிகமாகும். சிவபக்தியால் நல்லொழுக்கத் தினால் ஆன்மா ஈடேற்றமடையும். நாம் பிறவி எடுத்த பலனை அடைந்தவராவோம்.

---

## ஆயுத பூஜை எதற்காக கொண்டாடுகிறோம்?

இதன் வரலாறு என்பது மிகவும் சுவாரஸ்சியமானது. பஞ்ச பாண்டவர்கள் சூதாட்டத்தில் தோற்று வனவாசம் சென்றபோது நாட்டையும், பெருமையையும் இழந்தனர். அப்போது தங்களின் ஆயுதங்களை வன்னிமரத்தடியில் மறைத்து வைத்துள்ளனர். 14 வருட வனவாசத்திற்குப்பின் நாடு திரும்பிய அவர்கள் அதை நினைவுகூரும் விதமாக ஒவ்வொரு வருடமும் பாண்டவர்கள் தங்கள் ஆயுதங்களை வன்னி மரத்தடியில் வைத்து பூஜை செய்தனர். அவர்கள் ஆயுதம் வைத்து வணங்கியதால் ஆயுதபூஜை என்று அழைக்கப்படுகிறது. இன்று நமக்குப் பயன்படும் உயிரற்ற பொருட்கள், உயிருள்ள பொருட்கள் என அனைத்தும் மக்களுக்கு ஒரு பகுதியாக பயன்படுகின்றன என்பதை உணரவேண்டும்.

*பிறர் நலன் பேணுவதே சொர்க்கம். மற்றவர் வளர்ச்சிகண்டு மனம் புழுங்குவதே நரகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருவடிப் பெருமை

– திரு செ. பாலச்சந்திரன் அவர்கள் –

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச்செய்த திருமுறைகள் மூன்று. அவையாவன: முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகள். இவற்றில் முதலாம், இரண்டாம் திருமுறைகளில் திருவடிப்பெருமை பற்றிய நிறையப் பதிகங்கள் உள்ளன. ஆனாலும் ஒரு சில திருப்பாடல்களை மட்டும் சிறியேன் உதாரணமாக எடுத்துக்காட்டத் திருவருள் கைகூட்டியது. தேவாரம் ஏழு திருமுறைகளாக அமைந்துள்ளது. சப்தகோடி மகா மந்திரங்களுக்கு இணையானது என்பதால் (சப்த - ஏழு) திருவருளால் ஏழாக வகுக்கப்பெற்றது. முதன் முதலாக ஏடுகளிலும், கல் வெட்டுக்களிலும் இருந்த இத் திருப்பாடல்களை யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் (கந்தர்மடம்) தேடித் தொகுத்து “அடங்கன்முறை” என்று முதன்முதலாக பெருஞ்சிரமத்தின் மத்தியில் வெளியிட்டார். இதன் சிறப்பை “திருமுறைப் பெருமை”, “ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர்” என்ற நூல்கள் மூலம் அறியலாம். “அடங்கன்முறை” என்ற பதத்தில் உள்ள எழுத்துக்கள் எத்தனை? அதுவும் ஏழு. எனவேதான் எல்லாத் திருத்தக்க பாடல்களையும் நம்பியாண்டார் நம்பி ஏழு திருமுறைகளாக வகுத்தருளினார். அகத்தியர் தேவாரத் திரட்டு மூவரால் அருளிச் செய்யப்பெற்ற தமிழ் வேதமாகிய தேவாரம் ஒரு இலட்சத்து இரண்டாயிரம் திருப்பதிகம் உடையது என்றும் அவைகளுள் எழுநூற்றுத்தொண்ணூற்றேழு திருப்பதிகம் ஒழித்து ஒழிந்தவை இறந்துபோயின. எஞ்சி நின்ற எழுநூற்றுத்தொண்ணூற்றேழு திருப்பதிகங் களையும் திருவாரூர் அபயகுலசேகர சோழ மகாராஜாவுடைய வேண்டுகோளின்படி திருநாரை யூர்ப் பொல்லாப் பிள்ளையாருடைய மாணாக்கராகிய நம்பியாண்டார் நம்பி ஏழு திருமுறைகளாக வகுத்தருளினார். அவ் ஏழும் அடங்கிய திருமுறை “அடங்கன் முறை” எனப்படுகிறது.

கல்வி, அறிவு, ஒழுக்கம் என்பவற்றிற் சிறந்து விளங்கி சிவாலய முனிவர் இவ்வடங்கன் முறையினது மகிமையையும் அதனை நாடோறும் விதிப்படி முழுமையாகச் சிரத்தையோடு பாராயணம் செய்யின் முத்தி சித்திக்கும் என்பதை அறிந்து தாம் அப்படிப் பாராயணஞ் செய்ய ஆசை கொண்டார். அது முழுமையாக நிறைவேறுதல் கூடாமையால் வருத்தமுற்று சிதம்பரத்தை அடைந்து கனகசபையின் கண்ணே ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் சபாநாதரை வணங்கி தமது கருத்து முற்றும் பொருட்டு நெடுங்காலம் அரும் தவம் செய் தார். அப்பொழுது சபாநாதருடைய திருவருளினாலே “சிவாலய முனிவனே நீ பொதியமலையில் இருக்கின்ற அகத்திய முனிவனிடத்தே போவாயாயின் உன் கருத்து நிறைவேறும்” என்ற ஓர் அசரீரி வாக்குத் தோன்றிற்று. அது கேட்ட சிவாலய முனிவர் மனமகிழ்ந்து சபாநாதரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு சென்று, பொதியமலையை அடைந்து அகத்திய முனிவரைச் சிந்தித்து மூன்றுவருட காலம் அரும் தவம் செய்தார். அகத்திய மகாமுனிவர் அவருக்கு வெளிப்பட்டு அடங்கன் முறை முழுவதையும் அவருக்குபதேசித்து, அதில் இருந்து இருபத்து

*ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒத்துப்போகாமல் சமுதாயத்தில் வாழ்க்கை நடாத்த முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து திருப்பதிகங்களை எடுத்துத் திரட்டி இவைகளை முழுவதுமாக நாடோறும் பாராயணம் செய்பவர்கள் அடங்கன் முறை முழுவதையும் பாராயணம் செய்தவர்கள் ஆவார்கள் என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். சிவாலய முனிவர் அப்படியே இவ்விருபத்தைந்து திருப் பதிகங்களையும் நெடுங்காலம் பாராயணஞ்செய்து சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றார். இதுவே "அகத்தியர் தேவாரத்திரட்டு" வரலாறு. இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் இத்திரட்டு எட்டுத்தளங்களில் நின்று ஓதப்பெறுவது.

01) குருவருள் 02) பரையின் வரலாறு 03) அஞ்செழுத்துண்மை
04) கோயிற்றிறம் 05) சிவனுருவம் 06) திருவடிகள்
07) அருச்சனை 08) அடிமை

சிவபெருமான் உயிர்களுக்கு இரங்கி அருள்பாலிக்க தடத்த நிலையிலே எண் குணத்தவராகி, எட்டுப் புஷ்பங்களைத் (மலர்) தமக்குடையவராகி, எட்டு வீரச் செயல்களைச் செய்து, அட்டவீரட்டத் தலத்தையுடையவரானவரை எட்டுத் தளங்களிலே ஓதப்பெறும் சிறப்புடையது. இதில் ஆறாவது தளத்தில் "திருவடிகள்" இடம்பெறுகிறது. இதில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருவாழ்கொளிபுத்தூர் தலத் திருவடிகளைத் துதிக்கும் பதிகம் இடம்பெறுகிறது. இதேபோல் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்து அருளிய திருவடிகளைத் துதிக்கும் திருவதிகை வீரட்டானத்து இறைவன்மீது பாடியருளிய திருவடித் திருத்தாண்டகம் முக்கியமான பதிகமாகும். சுந்தரமூர்த்தி நாயனார் திருவடிகளைத் துதிக்கும் பதிகம் "திருப்புன்கூர்" தலப் பதிகமாகும். இவ்வாறு மூன்று பதிகங்கள் ஆறாவது தளத்தில் இடம்பெறுகின்றது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு தளம் நிறைவுறும்போதும் "நமப் பார்பதி பதயே" எனக் கூறி அரகர மகாதேவா என்று கூறி அடுத்த தளத்திற்குச் செல்வது மரபு. இம் மரபை அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவராக இருந்து மறைந்த அமரர் பண்டிதர் வ. பேரின்பநாயகம், அமரர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பின்பற்றி வழிநடாத்தி வந்தனர். மாதந்தோறும் வரும் பூரணை தினத்தில் அகத் தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் இடம்பெற்று மாகேசுர பூசை செய்வது மரபு. கடந்த பத்து வருடங்களாக இம்மரபு நால்வர் சிவதொண்டன் நிலையத்தில் வைத்து வழிபாடு செய்யத் தொடங்கிய காலத்தில் இருந்து அங்கு இடம்பெற்று வருகின்றது. "திருவடி" வழிபாட்டுடன் தேவாரம் இணைந்த ஒன்று. சிவகதி பெற அவனடிபேணி அருள்பெற அகத்தியர் தேவாரத்திரட்டும் ஓர் அரிய பொக்கிஷம் ஆகும். தொடர்ந்து மூன்றாம் திருமுறையில் திருவடிப் பெருமையை நோக்குவோம்.

திருஞானசம்பந்தரின் தந்தையார் சிவபாதவிருதயர் உலக நன்மையின் பொருட்டு யாகம் செய்ய நினைந்தார். ஆனால் பெருந்தொகையான பொருட்தேவை ஏற்பட்டதால் மிகவும் கவலை கொண்டவராய் தமது புத்திரராகிய சம்பந்தரிடம் தனது தேவையைக் கூறினார். அப்பொழுது எம்பெருமானைப் பற்றுக்கோடாக உடைய சம்பந்தர் திருவாவடுதுறை எம் பெருமானிடம் காந்தாரபஞ்சமப் பண்ணில் "இடரினும் தளரினும்..." எனத் தொடங்கும் பதிகத் தைப் பாடி இறையருளால் பன்னீராயிரம் பொன்னைப் பெற்றார். இவ்வாறு திருஞானசம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியருளிய தேவாரப் பதிகம் வருமாறு:

தலம்: திருவாவடுதுறை. பண்: காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

இடரினும் தளரினும் எனது றுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

திருச்சிற்றம்பலம்

திருப்பாற்கடலில் தோன்றிய அமுதோடு கலந்த நஞ்சை மட்டும் தான் தன் மிடறினில் அடக்கி எல்லா உயிர்களையும் காத்தருளிய எம்பெருமானே எத்தகைய துன்பம், துயரம், நோய் என்னைத் தொடர்ந்து துன்பம் செய்தாலும் உனது திருவடியையே தொழுது எழும் எமக்கு நாம் வேண்டுவதை நீ கொடுக்காது இருப்பது உனது இன்னருளோ? எம்பெருமானே இல்லையெனாது அருள்வாயாக என்றவாறு இப் பதிகம் தொடர்கிறது.

இரண்டாவது திருப்பாடலில்,

திருச்சிற்றம்பலம்

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழினத் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

திருச்சிற்றம்பலம்

நால்வரினும் இல்லை சாவு (இறப்பு) வரினும் அதனால் துன்பத்துள் நான் வீழ்ந்தாலும் உனது திருவடியை விடவேமாட்டேன் என்று சரணாகதி நிலையில் இப்பாடல் இடம்பெறுவதை நோக்கலாம். (தொடரும்...

## கதிர்காமம் இருந்து சந்நிதிவந்த வேலன்

கோடான கோடிபக்தர் குறை கேட்டருளும் முருகா
தேவாதி தேவர் தொழும் தெய்வப் பெருமானே திருப்புகழ் நாதா
நீடாயுளும் நிலைபெற்ற உன்நினைவும் அகலாத தனிஞானமும் தருவோனே
சூரான வேலைக் கைக்கொண்டவா, கொடுசூரரை வதைசெய்த அன்பு வேலவா
ஆடிவரும் தோகைமயில் மீது ஏறியே அசைந்தாடி வருகின்ற கோலம்
பாராத கண்ணுண்டோ? உனைநாடித் தேடாத மனமுண்டோ?
காலாதி காலத்தின் கடவுள் நீயன்றோ சந்நிதி வேலவா
கதிர்காமம் நின்றிங்கு வந்தவா கரம்கூப்பித் தொழுகின்றோம் காப்பாய் நீயே.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*நல்ல வாழ்க்கை நடாத்துவதற்கு நல்ல பண்புகள் அவசியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளின் பவளவிழா சார்ந்த வாழ்த்துப்பா

– *திரு வ. சிவநேசன்* அவர்கள் –

அவதாரத் தெய்வமென அவனிதனில் அவதரித்து
சந்நிதியான் வழிநடத்த நல்ஆசான் - குருநாதன்
மயில்வாகனம் சுவாமி ஆச்சிரமந் தன்னில்
பணியோடு சிறப்பான பயிற்சிபெற்ற குருவே வாழி! வாழி!!

மயில்வாகனம் சுவாமியென்றால் சிறப்பம்சம்கொண்ட ஒரு தெய்வம்
அத்தகையவரைக் குருவாகக்கொண்டு பணிசெய்து பயின்று அவர்போலே
அவரது நடைமுறையைக் கைக்கொண்டு அவர் ஆச்சிரம நாமம்
சிறப்பாக அரசடியில் ஆச்சிரமம் அமைத்த குருவே வாழி! வாழி!!

சந்நிதியானைச் சரணடைந்த சாமியவர் சந்நிதியான்
சகலதுமே தருவான் நான் ஒரு கருவியென்று மனமார வணங்கி
நாளும் பணிசெய்ய தானாகப் பொருளோடு பணம்சேர
அன்னப் பணியை சிறப்பாக வழிநடத்தும் குருவே வாழி! வாழி!!

சந்நிதியான் பூவரசின் கிளையொன்றை முற்றத்திலே நாட்டிவைக்க
அது தானாக வேரோடி கிளைபரப்பி இன்று விருட்சம் ஆனதுபோல்
ஆச்சிரமம் இன்று பெருவிருட்சமாகி கற்பகதருவாக
துன்பமுற்ற மக்களுக்கு வேண்டும் உதவிப்பணி செய்யும் குருவே வாழி! வாழி!!

நாட்டு மக்கள் அனைவரையும் தன் மக்களாய் நினைந்து
துன்புறுவோர் இருக்கும் இடம்தேடி உதவிக்கரம் கொடுத்து
பேருக்கோ புகழுக்கோ அடிமை ஆகாமல் மனமார
சந்நிதியான் தர பல அறப்பணிகள் செய்யும் குருவே வாழி! வாழி!!

ஆரம்ப காலத்தில் அன்பர்கள் துணையோடு
உள்ளவர்கள் முன்சென்று உதவிபெற்று தவிப்போடு
அன்னப்பணி செய்ய சந்நிதியான் மனம் நினைந்து
இருக்கும் இடத்தில் நிதியொடு பொருள்சேர அருள்பெற்ற குருவே வாழி! வாழி!!

*காத்திருக்கத் தெரிந்தவனுக்கே அனைத்தும் கிட்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத்தில் சந்நிதியான் குடியாக கதிர்காமன்மேல் அன்புகொண்டு
கதிர்காம யாத்திரை செய்பவரை வழிப்படுத்தி சிறப்பாக
சந்நிதியில் இருந்து யாத்திரைக்குப் புறப்படுவோர் அனைவருக்கும்
உதவிக்கரம் கொடுக்கும் உத்தம குருவே வாழி! வாழி!!

கதிர்காம யாத்திரையை தானும் விருப்போடு தவிப்பாகச் செய்து
அடியவரை அழைத்துச் சென்று அனைவரையும் வழிப்படுத்தி
தேவியவள் வாசலிலே அன்னப்பணிசெய்து சிறப்பாக
முருகனது ஆசிபெற்ற குருநாதா நீடு வாழி! வாழி!!

முருகனை முன்னிறுத்தி முழுமனதாய் பணிசெய்ய எல்லாமே
வெகுசிறப்பாய் நடப்பதற்கு நான் முருகனது ஊழியன்
என்ற நினைப்போடு பேர் புகழை விரும்பாது நிறைவாக
எழிலோடு வாழும் என் குருவே பல்லாண்டு வாழி! வாழி!!

பவளவிழாக் கண்ட பேரன்புக் குருநாதன் அன்புநிறை
மைந்தர்கட்கு அரிய உபதேசம் செய்துள்ளார்
நீங்களுமே என்னைப்போல் பணி செய்தால்
முருகன் துணை இருப்பான் ஆகையினால் பற்றற்ற
மனநிலையில் மனமாரப் பணிசெய்க என்ற குருநாதா வாழி! வாழி!!

பவளவிழாக் கண்ட எங்கள் அவதாரத் தெய்வமான
மோகன் சாமி வாழ்க வாழ்கவே.

நோயற்ற வாழ்வோடு திருநிறைந்த செல்வம்பெற்று
அறப்பணிகள் மனங்குளிரச்செய்து வாழ்க! வாழ்கவே!!

வாழ்ந்துகாட்ட வந்துதித்து வைய மக்கள் துயர்
துடைத்து மனமாரப் பணிசெய்து மனங்குளிர
வாழும் தெய்வம் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! வாழ்க!! வாழ்கவே!!!

---

*மற்றவர்களுக்காக நாம் மேற்கொள்ளும் மிகக் குறைந்த அளவு உழைப்பும் நமக்குள்ளே இருக்கும் சக்தியைத் தட்டி எழுப்புகிறது. மற்றவர்களுடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு நினைப்பதுங்கூட சிங்கத்திற்குச் சமமான ஆற்றலை நமது இதயத்திற்குத் தருகிறது. உங்களுக்குப் பின்னால் நீங்கள் வாழ்ந்து மறைந்ததற்கு அறிகுறியாக எதையாவது விட்டுச் செல்லுங்கள். அப்படி இல்லாவிட்டால் மரம் கல் முதலியவற்றுக்கும் உங்களுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது.*

*வீணாகாத ஒரே விஷயம் உழைப்பு மட்டுமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைக் கூத்தனின் ஆடல் காண வாரீர் (தொடர்ச்சி...)

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் –

## ஆன்மலயம் அருளும் ஆதிரை (திருவாதிரை)

ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் இயங்குகிறான் இறைவன். அணுவிற்குள் அணுவாக நின்று ஆடுகிறான். அணுவிற்கு வெளியே இருந்து அதனை ஆட்டுகிறான். அணுவின் ஊனாக இருந்து உடலைத் தாங்குகிறான்.

கயிறு இல்லாமலேயே இந்த அண்ட பம்பரங்களை ஆட்டத் தெரிந்தவன் அவன். ஆட்டுவிக்கிறவனும் ஆடிக்கொண்டேதான் ஆட்டுகிறான். அவன் ஆடிக்கொண்டே ஆட்டினால் தான் அண்டங்கள் ஆடும். ஒரு நாமம், ஓருருவம் ஒன்றுமில்லாத இறைவனை ஆடும் பெருமானாக நடராஜனாக உருவகப்படுத்தி இருக்கிறார்கள்.

திருமந்திரம் பாடிய திருமூலர், சங்கப்புலவர் கபிலர், நக்கீரர், சம்பந்தர், அப்பர், மணிவாசகர், தெய்வக் கவிஞர்களான வள்ளுவர், கம்பர், சேக்கிழார், பரஞ்சோதி முனிவர் எல்லோரும் நடராஜப் பெருமானைப் பாடிப் பாடித் துதித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெருமானின் திருவிழாக்களில் ஒன்று திருவாதிரை. திருவாதிரை சிவபெருமானுக்குகந்த நாள். திருவோணம் திருமாலுக்கு சிறந்த நாள்.

மார்கழி மாதத்தில் பௌர்ணமியும் திருவாதிரை நட்சத்திரமும் வரும் நாள் திருவாதிரைத் திருவிழாவிற்குரிய நாள். திருஞானசம்பந்தப் பெருமான் "கார் திருசோலை கபாலீச்சரம் அமர்ந்தான் ஆதிரைநாள் காணாது போதியோ பூம்பாவாய்" எனப் புகழ்ந்து பாடியுள்ளார். சிதம்பரம் நடராஜப் பெருமானுக்கும், பொதுவாக விநாயகப் பெருமானுக்கும் சிறப்பாக நடைபெறும்.

மார்கழித் திருவாதிரையன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் தென்னாடுடைய சிவனை, கூத்தப்பெருமானை, குனித்த புருவத்தையும், குமிண்சிரிப்பையும், விரித்த சடையையும், பவள மேனியையும், எடுத்த பொற்பாதத்தையும் கண்டு களிக்கின்றனர். இறைவன் உமையம்மை காணத் திருக்கூத்து இயற்றும் காரணத்தால் அண்ட சராசரங்கள் இயங்குகின்றன. உலகில் அறிவுள்ள பொருட்கள் வினைப் போகம் துய்க்கின்றன. அவற்றிற்கு அறிவில்லாப் பொருட்கள் பயன்படுகின்றன. இதுவே எம்பெருமான் செய்யும் ஊன் நாடகம்.

நிலையற்ற உலக இன்பங்களினின்றும், நிலைத்த பேரின்பத்தைக் கொடுப்பது இறைவன் திருவடிச்சார்பென்று உலக உயிர்கள் உணர்ந்து நிற்கும் தன்மையைக் காட்டுவது ஞான நாடகம். இதனை மாணிக்கவாசகப் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊன் நாடகம் ஆட்டுவித்தவா
உருகி நான் உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆட்டுவித்தவா"

என்று விளங்க வைத்திருக்கிறார். மார்கழித் திருவாதிரையன்று ஆண்டவனின் தாண்டவத்தைக் காண்பது மக்களாகப் பிறந்ததன் பயன்.

பூலோகக் கயிலாயம் சிதம்பரம். பிற தலங்களில் உள்ள மூர்த்திகள் இரவில் இந்த இதயத்தானத்தில் ஒடுங்கி மீண்டும் காலையில் தத்தம் ஆலயங்களுக்குச் செல்வார்கள் என்பர். கலைகள் எல்லாம் அர்த்தசாமத்தில் இங்கே வந்து ஒடுங்குவதால், அர்த்தசாம தரிசனம் இங்கு விஷேசம். திருவாரூரில் சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடத் தொடங்கிய போது; இறைவனே "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்தது தில்லையின் தலைமையைக் காட்டும்.

சிவபெருமான் என்றாலே திருமேனி அழகன், பேரருளாளன், பேரழகன். அமுதனின் இத்தகைய பேரழகைக் காண அன்னை சிவகாமியும், மகரிஷிகளும், மாமுனிவர்களும் ஒரு சமயம் ஆசைப்பட்டனர். அதை நிறைவேற்றத் திருவுளம் கொண்ட திருக்கயிலைநாதன் தாருகா முனிவர்களைக் காரணம் காட்டித் தன் திருநடன அழகைக் காட்டியருளினார். கேட்டவர்க்குக் கேட்டவரம் அருளும் தன்னிகரில்லாத தெய்வம் பரமன். "சிவ சிவ" என உள்ளம் உருகி ஒருமுறை கூறினாலே அம்மையப்பன் தன் அடியவர்களுக்கு அடிமையாகிவிடுவான். அளவற்ற ஆணவம் கொண்ட இராவணன் கயிலைமலையை நகர்த்த முற்பட்டபோது, அம்மை கலங்க, ஐயன் சீற்றங்கொண்டு தனது வலதுகால் கட்டை விரலால் சிறிது அழுத்தினார். ஆபத்தை உணர்ந்த இராவணன் சாமகானம் பாடினான். அந்த சாமகானத்தைக் கேட்டவுடனே இறைவன் சீற்றம் மறைந்தது. உள்ளம் குளிர்ந்து அவன் கேட்ட வரத்தை அளித்தார். தாருகா முனிவர்களது கர்வத்தையும் அஞ்ஞானத்தையும் போக்கி, அவர்களை ஆட்கொண்டு அவர்களை சிவபக்தர்களாக மாற்றினார். அந்த மகிழ்ச்சியில் ஆனந்தத் திருநடனம் ஆடினான் ஐயன். அந்தத் திவ்வியத் திருநாளே ஆருத்ரா தரிசன நாளாகும். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணத்தின்போது வியாக்ரதபாதரும், பதஞ்சலியும் சிதம்பரத்தில் தினமும் நடராஜரின் திருநடனக் காட்சியைக் கண்டு களித்துப் பிறகு உணவு உண்பதால், அந்த ஆனந்தத் திருநடனக் காட்சியை அவர்களுக்குக் காட்டியருளினார். "திருவாதிரை" புண்ணியதினம் பொற்சபையான சிதம்பரத்திலே இந்த ஆருத்திரா தரிசனம் தெய்வீகத் தனிச்சிறப்புப் பெற்றதாகும். அன்று ஐயனையும், சிவகாமி அம்மையையும் தரிசிப்பது அனைத்துப் பாவங்களையும் போக்கி; பெறற்கரிய பேறுமாகும். அல்லல்களுக்கு அருமருந்தாகும்.

நடராஜப் பெருமானுக்கு நிகழ்த்தும் அபிஷேக ஆராதனைகளிலும் ஐந்தொழில்முறை அமைந்திருப்பதாக ஆன்றோர் கூறுவர். பெருமானைப் பீடத்தைவிட்டு எழுந்தருளப் பண்ணுதல் தோற்றம். திருமுழுக்கு முதலியன திதி. கறுப்புச் சாந்து அணிதல் சங்காரம். வெள்ளை ஆடை சாற்றல் திரோபவம். உற்சவம் கொண்டருளல் அநுக்கிரகம். திருவாதிரை நன்நாளில் இறைவனுக்குக் களி நிவேதனம் செய்வது வழக்கம். திருவிசைப்பா பாடிய சேந்தனாரின்

*எங்கு எளிமை, நேர்மை இல்லையோ அங்கு உயர்வும் மேன்மையும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் திறத்தை இவ்வுலகிற்குக் காட்டத் திருவுளம் கொண்டார் இறைவன். அவ்வடியார் நிவேதித்த களியினை சிதம்பரம் கோயில் முழுவதும் சிதற வைத்து மணங்கமழச் செய்தார்.

மெய்யன்பர்கள் இதன் கருத்து தெரியாது திகைத்தனர். அப்போது இறைவன் சேந்தனார் படைத்த களியினை உண்டு மகிழ்ந்தோம் என்று அசரீரியாகச் சொன்னார்.

"திருவாதிரைக்கு ஒரு வாய்க் களி" என்ற பழமொழியும் யாவரும் அறிந்ததே. சேந்தனார் களி நிவேதித்த செய்தியை திருக்களிற்றுப்படியார் என்ற சித்தாந்த சாஸ்திர நூல்;

அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க அவிழ்ந்தசடை
வேந்தனார்க்கு இன்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்.

என்று புகழ்ந்து கூறுகிறது.

பட்டினத்தடிகள் பெருந் துறவு மேற்கொண்டவுடன் தன் கணக்கராகிய சேந்தனாரை நோக்கித் "தன் பெருஞ் செல்வமெல்லாம் கொள்ளை கொள்ளும்படி திறந்துவிடுக" என் ஆணையிட்டார். அப்படியே சேந்தனாரும் செய்தார். இவ் உண்மையை உணராத மன்னன் எஞ்சியிருந்த பொருட்களைக் கைப்பற்றிக்கொண்டு, சேந்தனாரைச் சிறை வைத்தான்.

சேந்தனாரின் சிறை நிலையுணர்ந்த பட்டினத்தடிகள் மூத்த பிள்ளையாரை வேண்டிக் கொண்டார். பிள்ளையாரும் சிறை நீக்கி சேந்தனாரை அடிகள்முன் வருமாறு செய்தார். குடும்பத்துடன் அடியில் வீழ்ந்து வணங்கிய சேந்தனாரை நோக்கி அருள்புரிந்து, நீ தில்லைத் திருப்பதி சென்று விறகுத் திருத்தொண்டியற்றி, குடும்பத்துடன் வாழ்க என்று பணித்தார். அதன்படி எல்லையில்லா அன்பு பூண்டு தில்லைச் சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் ஆனந்தத் தாண்டவம் புரிந்தருள சேந்தனார் கண்டு மகிழ்ந்தார்.

அவரின் அன்பின் உயர்ச்சியை பக்தர்களுக்கு காட்டவேண்டுமென திருவுளம் கொண்டு மார்கழித் திருவாதிரைத் திருநாளில் திருத் தேரத் திருவிழாவின்போது பெரு மழை பொழியச் செய்து தம்முடைய தேரைச் சேற்றில் புதையச் செய்தார். தேர் அசையவில்லை.

"சேந்தா தேர் ஓடப் பல்லாண்டு பாடுக" என்ற அசரீரி எல்லோரும் கேட்க விண்ணில் ஒலித்தது. அவர் தான் எப்படிப் பாடுவது என்று இறைவனை வேண்டி நிற்க "மன்னுக தில்லை" என எம்பெருமான் அடியெடுத்துக் கொடுத்தார். உடனே சேந்தனார்,

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெலாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன் அடியோர்க்
கருள் புரிந்து

*கஷ்டப்பட்டு உழையுங்கள். நீங்கள் உழைக்கும் எந்த உழைப்பும் வீணாவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

எனும் திருப்பல்லாண்டைப் பாடியருளினார். திருத்தேர் தானே ஓடி வீதி வலம் வந்தது. இந்த அற்புதத்தைக் கண்டோர் சேந்தனாரின் பக்தியை மெச்சினர். அற்புதமான இந்த மார்கழித் திருவாதிரை நன்னாளில் ஆருத்ரா தரிசனமாம் ஆடலரசனின் தாண்டவக் கோலத்தைத் தரிசித்து ஆன்மலயம் பெறுவோமாக! (தொடரும்...

## வாழ்வுக்கு ஒளியாக இருப்பாய்!

*பல்லவி*

*சரவணப் பொய்கையில் பிறந்தவனே!*
*சந்ததம் அருள் மழையைப் பொழிபவனே!*
*(சரவண...*

*அனுபல்லவி*

*அரவணைத்தே எம்மை ஆளும் ஐயனே!*
*ஆற்றங் கரையில் கோவில் கொண்ட குகனே!*
*(சரவண...)*

*சரணம்*

*அண்டி வருவோர்க்கு அபயம் அளிப்பவனே!*
*அம்மையர் இருவருடன் அருட்காட்சி தருபவனே!*
*தண்டமிழ்த் தெய்வமாய் தரணியில் இருப்பவனே!*
*தமிழ் ஞானப் பழமாக எமை என்றும் ஆள்பவனே!*

*உருகி உருகி உனை நாம் பாடுவோம்!*
*உன் திருப்புகழ் பாடி நாம் திளைப்போம்!*
*வருகின்ற வினை யாவும் தீர்த்து வைப்பாய்!*
*வாழ்வுக்கு ஒளியாக நீயே இருப்பாய்!*

**-கி. குலசேகரன்-**

---

*எவராக இருந்தாலும் முதலில் தானே நல்ல நடத்தையில் நிலைபெற வேண்டும். அதன் பின்னர்தான் மற்றவர்களுக்கு உபதேசிக்கப் புறப்படவேண்டும். இவ்வாறு நடப்பவர்கள் ஒருபோதும் கலக்கமுறுவதில்லை. ஒருவர் எதையாவது சொல்ல வேண்டுமென்றால், அதைத் தளராத மன ஊக்கத்துடனும், உறுதியுடனும் சொல்ல வேண்டும். அதற்கு அவரே முன்மாதிரியாகவும் இருக்கவேண்டும். அதுதான் தர்மத்தின் சாரமாகும்.*

*நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர்கள்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

இறைவனின் அருளைப் பெற்ற பாக்கியம் உடையோர் அருளாளர்கள் எனப்படுவர். எமது சமயத்திலே சமய குரவர்கள் சந்தான குரவர்கள் அருணகிரி நாதர் போன்றோர் ஈசனால் ஆட்கொள்ளப்பெற்ற அருளாளர்கள்.

வைணவ சமயத்திலே பன்னிரு ஆழ்வார்கள் ஸ்ரீ ராமதாசர் சைதன்யர் போன்றோர் மிக மேன்மைபெற்ற அருளாளர்கள். அவர்களது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் இறையின் இன்னருள் இழையோடிய விந்தையை அவர்கள் வரலாற்றை விளக்கமாகப் படித்தால் யாம் அறிந்து கொள்ளலாம்.

உதாரணமாக, ஸ்ரீ ராமதாசரது வாழ்வில் இடம்பெற்ற ஒரு அருள் நிறை சம்பவத்தை யாம் இவ்விடத்து நோக்குவோம்.

மகாராஷ்டிரத்தை ஆண்டுவந்த சத்ரபதி சிவாஜியின் குருவாகத் திகழ்ந்தவர் ஸ்ரீசமர்த்த ராமதாசர். இவரின் நற் போதனையின் வண்ணமே சிவாஜி மன்னர் தனது ஆட்சியை நடாத்தி வந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் மன்னர் சிவாஜியின் அழைப்பின்பேரில் ஸ்ரீராமதாசர் தஞ்சைக்கு வந்திருந்தார். ஐம்பொன்னால் சிற்பம் செய்யும் ஆற்றல் பெற்ற சிற்பிகள் வாழும் இடம் தஞ்சை என்பதை நன்கறிந்த ஸ்ரீராமதாசர், தான் அங்கு நிறுவிய மடத்தில், ஸ்ரீராமபிரானின் ஐம்பொன் விக்கிரகம் ஒன்றை அங்கு வாழ்ந்த திறமான சிற்பி ஒருவர்மூலம் அமைக்க விரும்பினார்.

எனவே தனது எண்ணத்தின்படி ஸ்ரீராமபிரான் ஐம்பொன் விக்கிரகம் ஒன்றை வடித்தெடுக்க சிறந்த சிற்பி ஒருவரையும் அழைத்துவரப் பணித்தார்.

பல்வேறு இடங்களில் தேடியும், தஞ்சையில் அந்நேரத்தில் ஒரே ஒரு சிற்பி மட்டும் இருந்தார். எனினும் அவர் மூப்பினால் பார்வையை இழந்துள்ளார் என்று அவருக்குப் பதில் கிடைத்தது. எனவே அவரால் இந்நிலையில் சிற்பம் வடித்தெடுக்க முடியாது என்ற பதிலும் வந்தது.

ஆனால் ஸ்ரீசமர்த்தராமதாசர் விடுவதாக இல்லை. "எப்படியாயினும் சரி நீங்கள் அந்த கண்பார்வையற்ற சிற்பியை உடனடியாக அழைத்து வாருங்கள்" என மீண்டும் பணித்தார்.

சிற்பி வருவதற்கு முன்பாக ஸ்ரீராமதாசர் மெழுகினால் ஸ்ரீராமன் இலட்சுமணன் சீதை அனுமர் ஆகியோரது வடிவங்களை அமைத்து வைத்திருந்தார்.

சிற்பி வந்ததும் தமது கண்களை மூடி பகவானைத் தியானித்தபடி தன் கரங்களால் சிற்பியின் கண்களைத் தொட்டார். தொடவும் சிற்பியின் கண்கள் ஒளிபெற்றன. சிற்பியால் நன்கு பார்க்கவும் முடிந்தது.

களிப்போடு ஸ்ரீராமதாசர் சிற்பியை நோக்கிக் கூறினார். ஒளிபெற்ற உமது கண்களால் இச் சிற்பங்களை ஐம்பொன்னில் அழகாக அமைவாக வடித்துத் தரல் வேண்டும். அதற்கு

*வாழ்வதில்தான் இன்பம். உழைப்பதில்தான் வாழ்வு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் அளித்த சிற்பி கூறினார். "மகா பிரபோ! தாங்கள் கேட்டுக்கொண்டபடி ஐம்பொன்னில் விக்கிரகங்களை வடித்துத் தருகின்றேன். ஆனால் ஒரு வேண்டுகோள் தாங்கள் எனது கண்களுக்கு பார்வை தந்தமைக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

ஆனால் நான் ஐம்பொன்னில் சிற்பங்களைச் செய்து முடித்ததும், மீண்டும் என் கண் பார்வையை எடுத்து விடுங்கள் என்று கூறி முடித்தார் சிற்பி.

ஸ்ரீராமதாசர் திகைத்தே போய்விட்டார். "ஏன் இந்த விபரீத ஆசை! சிற்பியாரே?" சிற்பியார் பதில் அளித்தார்.

"மகா பிரபோ! தங்களைப் போன்ற மகான்களைக் கண்ட பின்னரும், ஸ்ரீராமனின் திருவுருக்கொண்ட சிற்பத்தை ஐம்பொன்னில் வடிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றபின்னரும், இனி எனக்கு கண்கொண்டு பார்ப்பதற்கு உலகிலே வேறு என்ன இருக்கின்றது! இத்தகைய நிகழ்வின் பின்னர், உலக விவகாரங்களைக் கண்கொண்டு பார்த்து மனச் சஞ்சலத்தில் ஆழ யான் விரும்பவில்லை. அதற்காகவேதான் அவ்வாறு கூறினேன் எனப் பதிலளித்தார் சிற்பி.

சிற்பியின் ஆழமான உயர் நோக்கை எண்ணி வியப்பில் ஆழ்ந்தார் ஸ்ரீராமானுஜர். பக்தியும் பக்குவமும் எங்கெங்கெல்லாம் இழை ஓடுகின்றது பார்த்தீர்களா?

ஐம்பொன் சிற்பங்கள் நான்கும் தயாராகின. கிருஷ்ணபட்ச பஞ்சமி திதியன்று "சர்ஜன் காட்" என்ற புண்ணிய தலத்திற்கு அவை அனுப்பப்பட்டன. அம் மூர்த்திகளின் இன்னருள் பெற்ற ஸ்ரீ ராமானுஜர் அதே மாதம் கிருஷ்ணபட்சத்து நவமியன்று ஸ்ரீராமபிரானுடன் ஐக்கியமானார்.

இத்தகைய அருளாளர்களின் வரலாற்றைக் கேட்பதில் புண்ணியம், படிப்பதில் புண்ணியம், எடுத்துச் சொல்வதில் புண்ணியம். இவற்றில் ஒன்றைத்தன்னும் செய்யாது நாம் வாழ்வதில் என்ன புண்ணியம்?

---

*பூலோகத்தில் மரணத்துக்குப்பின் மேலுலகம் சென்ற கர்ணன், சூரிய லோகத்தில் உள்ள தன் தந்தை சூரியனின் இருப்பிடத்தை அடைந்தான். தந்தையே நான் என் நண்பன் துரியோதனனுக்கு செஞ்சோற்றுக்கடன் தீர்த்து தர்மத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தர்மத்திற்காக துரியோதனன் பக்கம் இருந்து போர் புரிந்தேன். ஆனால் வஞ்சகன் கிருஸ்ணர், என்னை வஞ்சித்து வீழ்த்திவிட்டார். இதன் காரணம் எனக்குப் புரியவில்லை என்று புலம்பினான்.*

*அதற்கு சூரிய பகவான், கர்ணா கிருஸ்ணரை வஞ்சகன் என்று சொல்லாதே. நீ ஒரு தவறு செய்துவிட்டாய். செஞ்சோற்றுக்கடன் தீர்ப்பது சிறந்த தர்மம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் கிருஸ்ணன் உயர்ந்த தர்மமாக விளங்குபவன். உயர்ந்த தர்மம் மற்றும் செஞ்சோற்றுக்கடன் தீர்த்தல் என்ற சாமானிய தர்மம் என்ற இரண்டு தர்மங்களில் எதைக் காப்பாற்ற வேண்டும் என்று வருகையில் உயர்ந்த தர்மத்தையே கிருஸ்ணன் காப்பாற்ற எண்ணுகிறான். நீ சாமானிய தர்மத்தைக் காப்பாற்ற எண்ணி, உயர்ந்த தர்மத்தைக் கைவிட்டாய். அதனால்தான் அழிந்தாய். மற்ற உயிர்கள் அனைத்திற்கும் தீங்கு செய்யாமல் வாழ்வதே உயர்ந்த தர்மம்.*

*எங்கு கூச்சல் அதிகமாக இருக்கின்றதோ அங்கு உண்மையான அறிவு இருப்பதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| S. குமார் | கனடா | 700,000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| சுந்தரம் மருந்தகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| திரு சந்திரபாலா குடும்பம் | நோர்வே | 10000. 00 |
| இரத்தினம்மா குடும்பம் | உடுவில் | 5000. 00 |
| திரு ஜீவரத்தினம் குடும்பம் | வல்வெட்டி | 2000. 00 |
| ந. யதீஸ்கரன் | சுன்னாகம் | 500. 00 |
| சி. ஆர்த்தி | அச்சுவேலி | 3000. 00 |
| சு. கோசலைகோபன் | இமையாணன் | 1000. 00 |
| சே. ரவீந்திரநாதன் | இமையாணன் | 2000. 00 |
| திரு ஜெயகுமரபதி | அச்சுவேலி | 500. 00 |
| சிவசோதி மாலினி | வட்டுக்கோட்டை (கல்விப்பணி) | 25000. 00 |
| | (அன்னப்பணி) | 25000. 00 |
| திரு சுந்தரலிங்கம் குடும்பம் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| ம. கயல்மோகன் | குப்பிளான் | 4புட்டி அரிசி |
| S. வசந்தகுமாரி | உடுப்பிட்டி | 1000. 00 |
| ஆ. கோபால் | உடுப்பிட்டி | 1மூடை அரிசி |
| பொ. தவராசா | புலோலி | 10000. 00 |
| த. சிவகுமார் | நீர்வேலி | 10000. 00 |
| து. இந்துஷா | நீர்கொழும்பு மரக்கறி, அரிசி | 1000. 00 |
| S. தனராசா குடும்பம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திரு நாகராஜா மூலம் பிரவீனா | சங்கானை | 25000. 00 |
| திரு சண்முகலிங்கம் குடும்பம் | நீர்வேலி | மரக்கறி 1மூடை அரிசி |
| ரோகினி கலா குடும்பம் | ஜேர்மன் | 25000. 00 |

*புரியாத விசயங்களைப் புகழ்வது தப்பு. இகழ்வதோ அதைவிடப் பெரிய தப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வீ. சின்னையா | புட்டளை | 5000. 00 |
| திரு விமலன் குடும்பம் | கொக்குவில் | 10000. 00 |
| திரு ரஞ்சித் குடும்பம் | கொக்குவில் | 10000. 00 |
| திரு சுசிகரன் குடும்பம் | மாவிட்டபுரம் | 1000. 00 |
| சிங்கராஜா லதா குடும்பம் | ஜேர்மன் | 50000. 00 |
| ஜெயபாலன் நதிகா குடும்பம் | பிரான்ஸ் | 10000. 00 |
| தனபாலசிங்கம் மனோன்மணி | வதிரி | 5000. 00 |
| சி. சுபாசினி | கனடா | 2500. 00 |
| ர. சுசி | பத்தமேனி | 10000. 00 |
| அ. சௌகுந்தலாதேவி | லண்டன் | 10000. 00 |
| வி. ஸ்ரீஸ்கந்தா | தம்பசிட்டி | 5000. 00 |
| M. ஆனந்தன் | இணுவில் | 30000. 00 |
| சி. நிசாந்தன் | நிலாவரை | 5000. 00 |
| க. ரஞ்சனா | புன்னாலைக்கட்டுவன் | 5000. 00 |
| லிங்கன் கூல்பார் | யாழ்ப்பாணம் | 50000. 00 |
| கு. பிரியதர்ஷன் | வரணி | 5000. 00 |
| த. சானுஜன் | சுவிஸ் | 5000. 00 |
| ஜெ. தேவமலர், ஜெ. ஜனுஷன், ஜெ. ஜரோமி | லண்டன் | 6000. 00 |
| அ. அபிஷன் | லண்டன் | 5000. 00 |
| திரு செல்வராசா குடும்பம் | கனடா | 5000. 00 |
| திரு தயாளன் குடும்பம் | சுன்னாகம் | 5000. 00 |
| க. சுமணதாசன் | பருத்தித்துறை | 20000. 00 |
| ரூ. நிகித்தா | பருத்தித்துறை | 5000. 00 |
| கி. லனியா, கி. ரிஷான் | லண்டன் | 10000. 00 |
| A. பரமேஸ்வரி | சிங்கப்பூர் | 50000. 00 |
| அ. நிலானி | உரும்பராய் | 2புட்டி அரிசி |
| K. கனகம் | சிங்கப்பூர் | 13000. 00 |
| க. பாஸ்கரன் | அவுஸ்திரேலியா | 20000. 00 |
| தி. செந்தில்நாதன் | இணுவில் | 5000. 00 |
| R. கனகசிங்கம் | இணுவில் | 3000. 00 |
| திரு லங்காபுரி ஆதீனம் | ஆனைப்பந்தி | 3000. 00 |
| திரு நந்தீசன் குடும்பம் | கனடா | 10000. 00 |
| V. கிருபானந்தன் | இணுவில் | 1500. 00 |
| தே. சிவபாக்கியம் | ஜேர்மன் | 50000. 00 |
| த. கமலா | நோர்வே | 1000. 00 |
| திரு முருகானந்தம் குடும்பம் | மானிப்பாய் | 3000. 00 |

நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தும் எவருக்கும் அது போதுமான அளவிற்கு கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திருமதி தம்பிராசா | திருநெல்வேலி | 1மூடை அரிசி |
| இ. லக்ஷன் | அச்சுவேலி | 700. 00 |
| T. தபேந்திரன் | அரியாலை | 5000. 00 |
| தி. நெடுஞ்செழியன் | லண்டன் | 5000. 00 |
| இ. சசிகுமார் | கொக்குவில் | 10000. 00 |
| க. நகுலேஸ்வரி | அளவெட்டி | 10000. 00 |
| திருமதி R. பொன்னுராசா | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| திரு நடேஸ்வரன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| ர. நிமாலினி | வண்ணார்பண்ணை | 5000. 00 |
| சசிகலா குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| V.T. பாலசுப்பிரமணியம் | உரும்பராய் | 5000. 00 |
| ஜே. சாம்பவி | உரும்பராய் | 5000. 00 |
| N. ஸ்ரீதரன் | உரும்பராய் | 5000. 00 |
| சி. கலைஞானதேவி, சி. குருபரன், சி. பகீரதன் | கனடா | 15000. 00 |
| திரு அரவிந்தன் குடும்பம் | கனடா | 10000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| சி. தவபாலன் | தொல்புரம் | 1000. 00 |
| தா. பொன்னுத்துரை | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| பி. சர்மிளா | மானிப்பாய் | 5000. 00 |
| T. ஆனந் குடும்பம் | மூளாய் (கனடா) | 10000. 00 |
| த. சிவராஜா | ஜேர்மன் | 2000. 00 |
| க. பிரபாகரன் | வரணி | 20000. 00 |
| து. மகாராணி | குடத்தனை | 2000. 00 |
| வி. ஜனனி | நல்லூர் | 10000. 00 |
| கி. மதுரா குடும்பம் | கனடா | 15000. 00 |
| J. சபேசன் | சுழிபுரம் | 10000. 00 |
| ர. ரமேஸ் | கொக்குவில் | 5000. 00 |
| D. விவ்யா | லண்டன் | 5000. 00 |
| A. சுகிர்தன் | வல்வெட்டித்துறை | 25k அரிசி |
| ம. அட்ஷயன் | கரணவாய் | 5000. 00 |
| சு. வேணுகாந் | கொடிகாமம் | 10000. 00 |
| J. இந்திரவதனா | வரணி | 2000. 00 |
| சி. சிவசுப்பிரமணியம் | சாவகச்சேரி | 500. 00 |
| ம. கஜேந்திரா | திக்கம் | 1புட்டி அரிசி 3000. 00 |
| திரு பிரதீபன் குடும்பம், ப. சிவருபன் | கனடா | 5000. 00 |
| பா. சிவபாதசுந்தரம் | மண்கும்பான் | 25000. 00 |

(தொடரும்...

*ஆயிரம் மைல்களுக்கான பயணம் ஒரு அடியிலேயே தொடங்குகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானஞாயிறு நாவலர் பெருமான்

**–திரு ச. தண்டபாணி தேசிகர்** அவர்கள்–

ஈழம் என்பது இனிமை, இனிமையான தேன் இவற்றை உணர்த்தும் பெயராக இருந்தது. இழுமென இடையறாது ஒழுகும் இயல்பு பற்றித் தேனை உணர்த்தியது என்றும், அதன் பிறகு அதன் பண்பாகிய இனிமைக்கு ஆயிற்று என்றும், பின்னர் மயக்கும் பொருள் களுக்கும் பெயராக அமைந்தது என்றும், சொற்பொருட் பயணத்தை விளக்கும் ஆய்வுநூல் உணர்த்துகின்றது.

ஆகவே, ஈழநாடு என்றால் தேன்போலும் இனிய நாடு இடையறாத பண்பாட்டில் ஒழுகிவரும் நாடு என்ற சிறந்த பொருளோடு சிந்தனைக்கு வருகிறதல்லவா?

இந்நாடு ஆதியிலே தமிழகத்தின் தென்பகுதியாகவே இருந்தது. உவர்கடல் ஊடறுத்துத் தாயும் - சேயுமாகப் பிரித்து வைத்துவிட்டது. அதனால் இன்று இரு நாடுகளாக எண்ணுகின்றோம். "தாயும் பிள்ளையும் ஒன்றாயிருந்தாலும் வாயும் - வயிறும் வேறுதான்" என்பதுபோல, பொருளாதாரம், அரசியல் போன்றவற்றால் வேறுபட்டிருப்பினும் "தாயைப் போல மகள், நூலைப்போல சேலை" என்பதுபோல, சில குணங்களால் ஒன்றுபட்டே இருக் கிறது.

தாயின் அரவணைப்பிலிருந்து விலகிய குஞ்சுக்குப் பருந்து முதலான பல பகைகளால் துன்பமும் நலிவும் தோன்றுதல்போலத் தாய்நாட்டிலிருந்து பிரிந்த சேய் நாட்டிற்குச் சமய நிலையாலும், கல்வியாலும், பண்பாட்டாலும் இன்னல்கள் பல விளைந்தன. அதனால் மாற்றங்கள் மலிந்தன.

வான்கோழியாட்டத்தைக் கண்டு கானமயில் தன் நடையை மறந்து, அதன் நடையைக் கற்றுக்கொண்டதுபோலப் படிப்பிற்காகவும் பதவிகளுக்காகவும், பெண்டுபிள்ளை, பொருள்போகம் இவற்றிற்காகவும் ஈழத்து மக்கள் புறச் சமய மரபுகளைப் பற்றி, நடையாலும், உடையாலும், உணவாலும், ஒழுக்கத்தாலுங்கூட வேறுபடத் தொடங்கினர்.

அரசியல், பொருளாதாரம், வாணிபம் என்ற போர்வையில் ஒளிந்து வந்த இஸ்லாமிய கிறிஸ்துவ சமய மக்கள் தத்தம் கொள்கைகளைப் பொருளாதாரமும், உத்தியோகத்தர்களு மாகிற எருவைப் பரப்பி விதைத்தனர்.

தாய்நாடாகிய தமிழகத்திலோ சிவாலயங்களையும், சிவத் திருமேனிகளையும் என்றும் அழியாத கலங்கரை விளக்கங்களாகப் பெற்று சிவானந்த சாகரத்திலே சிவாகம நெறிபற்றிச் சிவபோகக் கப்பலை ஓட்டித் தடையிலா வணிகம் செய்து வந்த தமிழ் மக்கள் மிண்டிய மாயாவாதம் முதலான சண்டமாருதம் வீச வழிவிலகி, பிறவிக்கடலில் மோகச் சுழலில் அறியாமையாகிற சுறாமீனின் வாயில் அகப்பட்டுத் தவித்தனர்.

அக்காலத்து வானம் எங்கும் மயக்க ஞானமாகிய இருள் கப்பிக் கிடந்தது. மோகமாகிய மேகம் சூழ்ந்து கிடந்தது. அதனால் மக்கள் சிவசூரியனை உள்ளவாறு உணரும் ஆற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தனர். ஒன்றிலும் உறுதியும் துணிவும் இன்றித் தவித்தனர். காய்ச்சலுக்கு ஒரு கடவுள் கனற்றுதலுக்கு ஒரு கடவுள் பொன்னுக்கு ஒரு கடவுள் போருக்கு ஒரு கடவுள் எனத் தத்தம் ஆசைக்கும் தேவைக்கும் தகப் பல கடவுளரைப் போற்றத் தொடங்கினர்.

"ஆகாயம் ஒன்றே குடங்கள்தோறும், குண்டு சட்டிகள்தோறும் பலவாக அதனதன் அளவாக விளங்குதல்போலப் பரப்பிரம்மமாகிய உயிர் ஒன்றே உடம்புகடோறும் ஒன்றிப் பலவாகத் தோன்றுகின்றன. ஆதலால் இது குடாகாயம், இது பராகாயம்" என்ற வேற்றுமை உணர்ச்சியற்று நான் பிரமம் எனத் தெளிந்து, என்றும் பிரம சாட்சாத்காரத்தில் இருப்பதே முத்தி. உயிர் பல - பிரமம் ஒன்று எனல் உண்மை ஞானம் அன்று என்னும் ஏகான்மவாதம் எளிமையாக மக்களிடையே ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தது.

இத்தகைய சூழ்நிலையிலே, தென்னிலங்கையில் தோன்றிய ஞானஞாயிறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்! ஞாயிறு, தோன்றிய இடத்திற்கு மட்டும் ஒளியைத் தருவதன்று. உலகம் எங்கும் ஒளியையும் வெப்பத்தையும் தந்து விளக்கத்தையும் வளர்ச்சியையும் அளிக்கும். அதுபோலவே இந்த ஞானஞாயிறு தென்னிலங்கையில் நல்லூரிலே தோன்றினாலும் தமிழகம் எங்கும் ஒளியை வீசிற்று. வெப்பத்தைத் தந்தது. ஞானப்பயிரை வளர்த்தது.

இந்த ஞானஞாயிறு உச்சிவானத்தை அடைந்த காலத்திலே திருவாவடுதுறை ஆதீனத் திலே அக்காலத்தே ஞானவரசு செலுத்திய சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் அவர்களும், இளைய பட்டத்து எழுந்தருளியிருந்த அருங்கலை வினோதர் அம்பலவாண தேசிகர் அவர்களும் "நாவலர்" என்ற பட்டத்தைச் சூட்டிப் போற்றிப் புகழ்ந்து சிவப்பணிக்கே ஆளாக்கினார்கள். ஆதலால், சிவஞான ஞாயிறு தில்லையிலேயே வாழ்வதாயிற்று.

சிவஞான ஞாயிற்றுச் சிந்தனை முழுவதும் தாய்நாட்டையும் சேய் நாட்டையும் திருத்திச் சிவப்பணி ஒன்றிலேயே ஈடுபடுத்தவேண்டும். அதிலும் தாய் திருந்தினால் சேய் திருந்துவாள். ஆதலால், தாய்நாட்டைத் திருத்தும் பணியை முதலில் தொடங்குவோம் என்று அதற்குரிய திருவருளை நாடியிருந்தனர்.

தமிழகத்திலே, கல்வியிலும், சமய ஒழுக்கங்களிலும், திருக்கோயில் வழிபாட்டு முறைகளிலும் இருந்த குறைபாடுகள் இவர்கள் ஞானக் கண்ணிற்கு முதலிற்றோன்றின. இவற்றை எப்படித் திருத்தலாம் என்ற ஆய்வுள்ளம் இவர்களை அரித்து வந்தது. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது", "விதையின் தன்மைதானே விளைச்சலில் வரும்". ஆகவே விதையை இளமையிலேயே திருத்தவேண்டும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து", "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" ஆகையால், கல்வி முறையை மாற்றி அமைத்துச் சிறுவர் சிறுமியர்கள் உள்ளத்திலேயே சிவநெறியைப் பரப்பவேண்டும் என்று எண்ணினார்கள்.

அதற்காகத் தில்லையிலும், வண்ணார்பண்ணையிலும் சைவப்பிரகாச வித்தியாசாலை களை அமைத்தார்கள். அவற்றில், இளமை தொட்டே தம்மிடம் பயின்று நல்லொழுக்கம், நற்சிந்தனை, தன்னலத் தியாகம் இவற்றைப் பெற்ற ஆசிரியர்களை நியமித்தார்கள். ஆசிரியரும் அவர்கள் போதனையும் நன்கமைந்தாலும், போதிக்கத்தக்க பாடப்புத்தகங்கள் இல்லாத

*அயராமல் உழைப்பவனே உண்மையான மேதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறை புலனாயிற்று. அதற்காக முதற் பாலபாடம், இரண்டாம் பாலபாடம், மூன்றாம் பாலபாடம் என்ற மூன்று புத்தகங்களை எழுதினார்கள். அவற்றையே தம் பள்ளிகளிற் பாடமாக அமைத்துப் படிப்பிக்கச் செய்தார்கள். புத்தகங்களால் விளையும் நன்மையை அறிந்த ஏனைய பிற பள்ளிகளும் இப்பாடங்களையமைத்து முன்னேறின. பாலபாடங்களில் முதற்பாடம் கடவுள், இரண்டாம் பாடம் ஆன்மா இப்படியாகச் சிவப்பரத்துவமும், தத்துவ ஆராய்ச்சியும், சமய ஒழுக்கங்களும் குரு லிங்க சங்கம இயல்புகளும் முறையாக மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப எளிய இனிய தமிழ் நடையில் எழுதப்பெற்றவை. மேலும் அரிதின் அறியக்கூடிய ஆகம சாரங்களும், புராண வரலாறுகளும் வசன வடிவாக வெளிவந்தன. அவற்றையே வகுப்பிற்குத் தகப் பாடங்களாக படிப்பித்து வந்தார்கள். அதனால், ஒரு கல்லில் இரு மாங்காய் விழுந்ததுபோல, இலக்கணக் குறைபாடில்லாத எளிய இனிய தமிழ்நடையும் வளர்ந்தது. கூடவே சமயக் கருத்துக்களும் வளர்ந்தன.

விளைவைக் கண்டு உழவன் மகிழ்வதுபோலச் சைவமும் தமிழும் ஒருங்கு தழைப் பதைக் கண்டு உள்ளம் பூரித்த இவர்கள் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், வில்லி பாரதம் முதலியவைகளையும் ஆராய்ந்து பதிப்பித்தார்கள். இவர்கள் பதிப்பிற்கு அக்காலத்திலே தனித்தொரு மதிப்பிருந்தது. தமிழறிஞர்களின் மனத்தைக் கவர்ந்தது. இப்படி, முதலிற் போதனைப்பணி, அதனையடுத்துப் பாடப் புத்தகப்பணி, அதனை அடுத்து வசன காவியப்பணி, அதனையடுத்து காவியப்பணி, அதனையடுத்து இலக்கணச் சுருக்கம் காண்டிகையுரை வினாவிடை முதலிய இலக்கணப் பணிகள், சமயத்திற்காகச் சைவ வினாவிடைகள், சைவசமய நெறியுரை முதலிய பணிகள் வளர்ந்து வந்தன.

அடுத்து, முதியோரையும் கேள்வி வாயிலாகத் திருத்தவேண்டும் என்ற சிந்தனை பிறந்தது. பல நாள் முயன்று ஆசிரியர்க்கு அடங்கி ஒடுங்கி, இருவென இருந்து சொல்லெனச் சொல்லிக் கற்கின்ற கல்வியைச் சில மணித்துளிகளிற் செம்மையாகச் சொல்லுவார் சொல்லக் கேட்டு முதியோரும் பயனடைவார்களே என எண்ணி இவர்கள் மரபுவழி தவறாத தம் பேச்சாற் றலால் இரு நாட்டிலும் சொன்மாரி பெய்து சைவத்தமிழ்ப் பயிரை வளர்த்து வந்தார்கள். அதனால் இவர்களைச் "சைவமெனும் பயிர் வளர்க்கும் எழிலிபோல்வான்" என மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் பாராட்டினார்கள். (தொடரும்...

***நன்றி: நாவலர் 200ஆம் ஆண்டு சிறப்புமலர்.***

---

*நமது மனம் ஒன்றை எப்படி நோக்குகின்றதோ, அப்படியே ஆகிவிடுகிறது. அற்புதம் என்று மனம் முடிவுகட்டிவிட்டால் அது அற்புதமாகவே மாறிவிடுகிறது. மோசம் என்று தோன்றிவிட்டால் மோசமாகவே காட்சியளிக்கிறது. ஒன்றைச் சரியென்று நினைத்துவிட்டால் மனம் நிம்மதியடைகிறது. தவறு என்று நினைத்துவிட்டால் மனம் தாவிக் குதிக்கிறது. அதனால்தான் நமது பெரியோர்கள் "நடப்பதெல்லாம் நன்மைக்கே" என்று கூறுவார்கள். கெட்டது நடந்தாலும் "நடப்பதெல்லாம் நன்மைக்கே" என்று எண்ணிவிட்டால் மனம் நிம்மதி அடைகின்றது.*

***நேற்றும் இன்றும் கதையாகக் கழிந்துவிட்டன. நாளை உதயமாவதை எதிர்பார்த்திருங்கள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில் முழங்காவில் மகா வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக 121 மாணவர்களுக்கு 340,000.00 ரூபா பெறுமதியான பாதணிகள் வழங்கப்பட்டன.

எல்லோரையும் நம்புவது அபாயகரமானது. ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் அபாயகரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அருணகிரிநாதர் குருபூசைத் தினத்தை முன்னிட்டு ஈழ நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் எஸ்.எஸ். குருஜி அவர்களின் வில்லிசை நிகழ்வு இடம்பெற்றது. அன்றைய நிகழ்வில் சமுதாயப் பணியாக ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு மாதாந்த மருத்துவக் கொடுப் பனவாக 10,000. 00 ரூபா வழங்கப்பட்டது.

எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உண்டு. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதுளை - எட்டாம்பிட்டி, 02ஆம் பிரிவில் அமைந்துள்ள வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலின் கோரிக்கைக்கு அமைவாக 640,000 ரூபா பெறுமதியான தேர் அமைத்துக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




மன்னார் - பெரியமடு, காயாநகர் கிராமத்தில் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு குடியிருப்புக்காக தற்காலிக வீடு அமைப்பதற்கு 210,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

எல்லோரும் தம்மை விட்டுவிட்டு யாரையோ சீர்திருத்த முயலுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காட்டுப்புலம், கரவெட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் தரம் -04இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கும்,பத்தமேனி அச்சுவேலி பிரதேசத்தைச் சேர்ந்த அச்சுவேலி மத்திய கல்லூரியில் தரம்- 07இல் கல்வி கற்கும் மாணவிக்கும் இரண்டு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சங்கானை பிரதேச வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக நரம்பியல் புனருத்தாபன பிரிவுக்குரிய பக்கவாத நோயாளிகளுக்கான சிகிச்சை இயன் மருத்துவருக்கு வேதனம் வழங்குவதற்கு 70,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

தொண்டைமானாறு, கெருடாவில் தெற்கு விவேகானந்தா முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுக்கு பரிசுப்பொருட்கள் கொள்வனவுக்காக 20,000.00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

தவறு நேர்ந்துவிடுமோ என்று அஞ்சி எந்தச் செயலையும் செய்யாமல் பின்வாங்குவது இழிவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனி மாத ஞானச்சுடர் வெளியீட்டுரை மதிப்பீட்டுரை நிகழ்த்தியவர்களுடன் சிறப்புப்பிரதிபெற்ற அன்பர்கள்



எப்போதும் அச்சத்தில் இருப்பதைவிட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்



ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்பினரால் கொழும்பு அருங்காட்சியகத்தில் கேட்போர் கூடத்தில் வைத்து ஆச்சிரம சுவாமிகளுக்கு தேசாபிமானி என்னும் விருதும், மனித உரிமைகளிற்கான மாகாண இயக்குனர் என்ற பதவி நிலையினையும் வழங்கியதையிட்டு ஆச்சிரமத்தில் வைத்து பேரவையினர் கௌரவித்தனர்.



எல்லாரும் தன்னை சீர்திருத்துவதைவிட்டு உலகத்தை சீர்திருத்த விரும்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிக்கான வரங்கள் சமாதியிலும் உண்டு

**– திரு கே.எஸ். சிவஞானராஜா** அவர்கள் –

கீரிமலையிலே மனித சாம்ராஜ்ஜியத்திற்கு வேண்டிய அத்தனை வரங்களும் உண்டு. என்ன அங்கு இல்லை? எல்லாமே உண்டு.

மூர்த்தி உண்டு, முத்தியுண்டு, கீர்த்தி உண்டு, கிராமமுண்டு, தலம் உண்டு, தங்கு மிடமுண்டு, தீர்த்தமுண்டு, தீர்த்த ஊற்றுண்டு, திக்கற்றவர்க்கு வாழ்வுண்டு, வரமும் உண்டு.

எப்படியெனில் திசையுக்கிரசோழனின் மகளான பேரழகி மாருதப்புரவீக வல்லியின் குதிரை முகம் நீங்கிய விசேடம் மிக்க தீர்த்தம் கீரிமலையிலேதான் ஊற்றெடுக்கிறது. கடல் என்பது விளையாட்டுக்குரிய இடமாக மாறிவிட்டதையெண்ணி மனம் வருந்துகிறது.

இலங்கையிலே அதி உயரமான கோபுரம் கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்திலேதான் காணப்படுகிறது. அதன் உயரம் 117அடி உயரமாகும். ஒரு கோபுரம் கட்டி 12 வருடம்வரை அதனது வரங்களுக்காக நாம் பொறுத்திருக்க வேண்டும். அவசர அவசரமாக வான் உயர்ந்த கோபுரங்கள் எழுப்புவதற்குத் திருமூலரின் திருமந்திரத்தினைத் திரும்பத் திரும்பப் படிக்கவேண்டும். மேற்படி கோபுரம் பையப் பையக் கட்டப்பட்ட கோபுரமாக இருப்பதனால், வரங்கள் ஏராளம் அதில் பொதிந்துள்ளது.

அதேபோல, இலங்கையில் சமாதிகளும் வரமீய்கின்றன. குறிப்பாக யாழ் மண்ணில் ஏராளம் சமாதிகள் இருந்து அருள் சுரக்கின்றன. அவற்றில் ஈழத்துச் சித்தர்களின் சமாதிகள் கீரிமலைக் கடற்கரையோரம் எக்கச்செக்கம் உண்டு. 1621ஆம் ஆண்டு தொடக்கம் சமாதிகள் பல அழிந்தொழிந்து போய்க்கொண்டிருக்கின்றன. கீரிமலைத் தீர்த்தக் கரையில், அதிசயமாக, குழந்தைவேல் சுவாமிகள் சமாதிச் சிவாலயம், அருளம்பல சுவாமிகள் சித்தர் சமாதி, ஈழத்துச் சித்தர்பீட சிவாலயம் ஆகியன மகா முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக அருளும் வரமும் சுரக்கிறது. யாரும் எவரும் அங்கு சென்று வரம் பெறமுடியும். அதனோடு மத்தியில் சைவ அறப்பணி மையம் 03.11.2016இல் அரசாங்க அதிபரால் இயங்க வைக்கப் பட்டுள்ளது. முன்பாக அண்ணாந்து பார்க்க வைக்கும் ஒரு சிவலிங்கம் கண்களை ஈர்த்துக்கொள்கிறது.

மேலும், சிறாப்பர் மடத்திற்கு முற்பட்ட ஒரு பாழடைந்த வீடு ஒன்று காணப்படுகிறது. குனிந்து செல்லக்கூடிய தலைவாசலும், கண்டகல்லு மதிலும், மூதாதையரின் இருப்பிடங்களும் நெஞ்சுக்கு நீதியும், உறுதியும், ஊக்கமும் பயக்கின்றன. சிறாப்பர் மடமும், மேற்படிச் சாமாதிச் சூழலும் ஆய்வுக்கும் அவசரத்திற்கும் உரியன. சமய பீடங்கள் கருத்தில் கொள்வார்களாக. மேலும் சமாதிக்குத் தெற்குப் பக்கத்தில் ஒரு பூர்வீக வீடுண்டு. அந்த வீட்டின் விமான முகப்பில் இலங்கையில் எங்குமேயில்லாத ஒரு அழகான அலங்கார பீடம் சமயரீதியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு பக்கம் சிங்கம், ஒருபக்கம் குதிரை, கீழ்ப்பக்கம் குதிரை, பூக்கள் 24, ஒரு பறவையின் குடும்பம், தூண்கள் எல்லாமே கலைநயம்

*மூளையில் பலம் இருப்பவன் மௌனமாக இருந்தால் விபரம் இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொட்டக்கூடியவை. அற்புத வரங்கள் இவையாகும். கீரிமலைச் சமாதிகள் சும்மாவல்ல! சௌபாக்கியங்களைத் தரக்கூடியன. கதிரைகளில் இருந்தால் இவை எப்படிக் கண்ணுக்குப் புலப்படும்? இறங்கியே ஆகவேண்டும்!

## என்றும் எம் நினைவுடன்!



சந்நிதியான் ஆச்சிரமத்தோடு கடந்த பல வருடங்களாக இணைந்து ஆச்சிரமம் ஆற்றும் பலவிதமான அறப்பணிகளுக்கும் குறிப்பாக வெளி மாவட்டங்களில் இடம்பெறும் சகலவிதமான சேவைப் பணிகளிலும் எம்மோடு தன்னை ஈடுபடுத்தி அச் சேவைகளை முன்னின்று நடத்துவதில் பெரும் பங்காற்றியவர்.

ஆச்சிரமத்தின்மூலம் இடம்பெற்ற கதிர்காம உற்சவத்திலும் கலந்து வேலவனை வழிபட்டு இறுதிவரை எம்முடன் பயணித்த பெருமாள் மகேந்திரன் அவர்கள் கடந்த 10.07.2025 வியாழக் கிழமை அன்று அமரரான செய்திகேட்டு ஆறாத்துயர் அடை கின்றோம்.

அன்னாரது ஆத்மா அவர் வணங்கிய வேலவனது பாதார விந்தங்களில் நிரந்தரமாக இளைப்பாற எல்லாம் வல்ல பரம் பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



*ஒளியாக நீயிருப்பதால் இருளைப்பற்றிய கவலை எனக்கில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# திருப்புகழைக் கற்றார் கரையேறுவார்

– *திரு துரை. கணேசமூர்த்தி* அவர்கள் –



**(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் விளக்க உரைகளிலிருந்து தொகுப்பாக்கம் செய்யப்பெற்றது)**

**திருப்புகழ் - திருச்செந்தூர்**

வந்து வந்து முன் தவழ்ந்து
வெஞ்சு கந்தயங்க நின்று
மொஞ்சி மொஞ்சி யென்ற முங்கு முந்தை யோடு
மண்ட லங்கு லுங்க அண்டர் பிளந் தெழுத
விண்ட லம்பி எந்தெழுந்த
செம்பொன் மண்ட பங்களும் பயின்ற வீடு
கொந் தளைந்த குந்தளந்த
ழைந்து குங்கு மந்த யங்கு
கொங்கை வஞ்சி தஞ்ச மென்று மங்குகாலம்
கொங் கடம்பு கொங்கு பொங்கு
பைங்கடம்பு தண்டை கொஞ்சு
செஞ் சதங்கை தங்கு பங்க யங்கள் தாராய்
சந்த டர்த் தெழுந்த ரும்பு
மந்த ரஞ் செழுங்க ரும்பு
கந்த ரம்பை செண் பதங்கொள் செந்தில் வாழ்வே
தண்க டங்கடந்து சென்று
பண் கடங் கடர்ந்த இன்சொல்
திண்பு னம் புகுந்து கண்டி றைஞ்சு கோவே
அந்த கன் கலங்க வந்து
கந்த ரங் கலந்த சித்து
ரஞ்சி றந்து வந் தலம்பு ரிந்த மார்பா
அம் புனம் புகுந்த நண்பர்
சம்பு நன் புரந்த ரன்த
ரம்ப லும்பர் கும்பர் நம்பு தம்பிரானே.

**பொழிப்புரை:**

சந்தனமரம், நெருக்கமாக வளர்ந்து அரும்புவிடும் மந்தார மரம், செழித்துள்ள கரும்பு, கிழங்குடன் கூடிய வாழை முதலிய மரங்கள் ஆகாயம்வரை வளர்ந்துள்ள திருச்செந்தூர் என்னும் திருத்தலத்தில் வாழ்கின்றவரே, குளிர்ந்த வனத்தை கடந்துபோய் பலவித பண் இசைகள் தங்கிய இனிய சொற்களைப் பேசும் வள்ளிபிராட்டியிருந்த,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணிய தினைப்புலத்தில் சென்று அவ்வம்மையாரைக் கண்டு வணங்கிய தலைவரே, இயமன் கலங்குமாறு வந்து குகையில் சேர்ந்த தெய்வயானையம்மை சிறப்புடன் நெருங்கி வந்து திருப்தியுடன் தழுவிய திருமார்பையுடையவரே, அழகிய கானகத்தில் வாழும் முனிவர்களும், சிவமூர்த்தியும், நல்ல இந்திரனும், உயர்ந்த பல தேவர்களும், அகத்திய முனிவரும் விரும்புகின்ற தனிப்பெருந் தலைவரே, அடிக்கடி முன்னே தவழ்ந்துவந்து, விரும்புகின்ற இன்பத்துடன் நின்று, அழுகின்ற குழந்தையும் மண்ணுலகமே குலுங்குமாறு தேவர்கள் வாழும் விண்ணுலகம் வரை ஓங்கி உயர்ந்த, சிவந்த பொன் மண்டபங்களும், பழகிய வீடும், மலர்க்கொத்துக்களுடன் கூடிய கூந்தல் தழைத்து - குங்குமப்பூ, பூசிய தனங்களுடன் வஞ்சிக்கொடி போன்ற மெல்லிய மனையாளும், அடைக்கலம் என்றுகூறி வருந்த, உயிர் பிரியுந் தருணத்தில் கோங்குமலர், அடம்பு மலர், நறுமணம் மிகுந்த பசிய கடப்பமலர், தண்டை, இனிது ஒலிக்கும் சதங்கை என்ற இவைகளுடன் கூடிய தாமரைத் தாள்களைத் தந்து அருளுவீர்.

**விரிவுரை:**

***வந்து வந்து முன் தவழ்ந்து -***

குழந்தைகள் தாய் தந்தையரது முன்னே தங்கச்சிலைகளைப்போல அழகாகத் தவழ்ந்து வந்து உள்ளத்தில் உவகைத்தேனை ஊட்டும்.

***மொஞ்சி, மொஞ்சி என்று அழும் -***

மொஞ்சி - முலை. தாய்ப்பாலை விரும்பி குழந்தை அழுவது.

***மண்டலங் குலுங்க -***

பாரத்தினால் பூதலம் குலுங்குவது.

***தஞ்சமென்று மங்கும் காலம் -***

மனைவி மக்கள் முதலியோர் அந்தோ நீர் போகின்றீரே என்று அழுது புலம்புதல்.

***கோங்கடம்பு -***

கோங்கு என்பது கொங்கு. அடம்பு என்பது கொடிப்பூ

*கடம்பு - முருகனுக்குப் பிரியமான மலர்.*

"உருள் பூந் தண்டார் புரளு மார்பினன்" -திருமுருகாற்றுப்படை.

"பரிமள மிஞ்சக் கடப்ப மாலையும் அணிவோனே" -திருப்புகழ்.

*சந் தடர்ந்தெழுந் தரும்பு மந்தரம் -*

சந்து அடர்ந்து எழுந்து அரும்பு மந்தரம்.

சந்து- சந்தனம், மந்தாரம் - மந்தரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கந்தரம்பை -*

கந்தம் - கிழங்கு, அரம்பை - வாழை ஆதலால் கிழங்குடன் கூடிய வாழை.

*சேண் பதங்கொள் -*

சேண் என்பது செண் என்ற சந்தத்தை நோக்கி குறுகி நின்றது. சேண் என்பது ஆகாயம். ஆகாயம் வரை ஓங்கி வளர்ந்த சோலைகளையுடைய திருச்செந்தூர்.

*தண்கடம் - குளிர்ந்தகாடு கடத்திற் குறத்திப்பிரான்*

என கந்தரலங்காரத்திலும் காணலாம்.

*பண் கடங் கடர்ந்த இன்சொல் -*

இனிய பண்கள் தங்கிய இன்னுரைகள் பேசுகின்றவர் வள்ளியம்மையார்.

*அந்தகண் கலங்க வந்து -*

தெய்வானையம்மை முருகனை மணக்குமாறு ஐராவதத்தின்மீது எழுந்தருளி திருப்பரங்குன்றத்துக்கு வந்தனர். அந்த வேகத்தைக் கண்டு இயமனும் அஞ்சினான்.

*கந்தரம் கலந்த சிந்துரம் -*

கந்தரம் - குகை. சிந்துரம் - யானை.

திருப்பரங்குன்றத்துக் குகையில் தெய்வயானையம்மை வந்தனர். இன்றும் திருப்பரங்குன்றக் குகையில் ஒரு புறம் நாரதரும் மற்றொரு புறம் தெய்வயானையம்மையும் வீற்றிருக்க முருகவேள் அடியார்க்கு காட்சி தருகின்றார்.

*அலம் புரிந்த மார்பா - அலம் - திருப்தி.*

தெய்வயானையம்மை திருப்தியுடன் தழுவுகின்ற திருமார்பையுடையவர் முருகர்.

*அம்புனம் புகுந்த நண்பர் -*

அழகிய வனத்தில் நின்று தவம் புரிகின்ற நட்புடையவர்களாகிய தவமுனிவர்கள்.

*சம்பு -*

சுககாரணர், சிவமூர்த்தி.

*புரந்தரன் -*

புரங்களை வென்ற இந்திரன்.

*தரம்பலும்பர் - தரம் - உயர்வு.*

உயர்வுடைய பலதிறம்பெற்ற தேவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கும்பர் -*

கும்பத்தில் பிறந்தபடியால் அகத்தியருக்கு இப்பெயர் அமைந்தது.

**கருத்துரை:**

செந்திற்குமரா, வள்ளிமணவாளா, வேதகுஞ்சரி கணவா - நாங்கள் மரணமடையும் நாளில் உனது சரணமலர் தந்து ஆண்டருள்வீராக.

**தொகுப்பாக்கத்திற்கான குறிப்புரை:**

எமது வாழ்நாளின் இறுதியில் ஒரு உண்மையைக் கண்டாக வேண்டும். அது யாதெனில் தெய்வம் ஒன்றே நமக்குத் துணை என்பதாகும். அதனாற்தான் திக்கற்றவர்களுக்கு தெய்வம் துணை எனப்பட்டது. ஆதலினால் நாங்கள் இவ்வுலகின்கண் வாழுகின்ற பொழுதில் அத்தெய்வத்தின்பால் நம்பிக்கை வைத்து வாழுவோமாயின் அந்தத் தெய்வம் இப் பிறப்பில் மட்டுமன்றி மறுபிறப்பிலும் தக்கதுணை செய்யும்.

இத்தகைய வகையில் தெய்வீக அருள் பெற்று வாழ்ந்து இறைபதமாகிய முருகனடியை பெற்றவர்களில் அருணகிரிநாதர் முக்கியத்துவமுடையவராவார். இவருடைய குருபூசைத் தினம் ஆனி மாதம் மூல நட்சத்திர நாளாகும். அருணகிரிநாதரின் இந்தக் குருபூசைத்தினம் சந்நிதியான் ஆச்சிரமத்திலும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அடுத்த திருப்புகழ்த் தொடரில் - "விந்த தினூறி வந்தது காயம்" என்ற பாடல் திருச்செந்தூர் முருகன்மீது பாடப்பெற்றதாக அமையும். (தொடரும்...

---

## வாசகர் உள்ளத்திலிருந்து...

*சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளின் வழிகாட்டலில் ஞானச்சுடர் கடந்த மாதம் முந்நூற்றி முப்பதாவது மலராக வெளிவந்தது. சுடர்மூலம் ஆன்மிக சமய அறிவினை சைவத்தமிழ் உலகம் பெற்று வருகின்றது. சுவாமிகள் ஆன்மிகப் பணியோடு தினந்தோறும் அன்னப்பணியும் செய்வதோடு காலத்தின் தேவையை உணர்ந்து தமிழ் மக்கள் வாழ்கின்ற இலங்கையின் பல பாகங்களிலும் தேவையறிந்து ஆலய திருத்தம், பாடசாலை மாணவர்களின் தேவைகள், போக்குவரத்து வசதியற்ற மாணவர் களுக்கு துவிச்சக்கரவண்டிகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பாடசாலை மாணவர் களுக்கும் மாதாந்தம் உதவிப்பணம் மற்றும் பல்வேறு பணிகளைச் செய்துவருவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். அருணகிரிநாத சுவாமிகளால் திருப்புகழ் பாடிய கதிர்காமக் கந்தன் ஆலயம் பாதயாத்திரை செல்லும் அடியார்களுக்கு செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஆரம்பித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை ஆலயம் செல்லும்வரை செய்து அதில் வயது வேறுபாடின்றி சிறுவர்களும் செல்வது இறைவன்மீது வைத்த நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது. இதை சைவத்தமிழ் உலகம் சிந்தித்து தம் பிள்ளை களையும் ஆன்மீக அறிவோடு வளர்க்கவேண்டிய சூழல் உருவாக்கப்பட வேண்டும். மேற்படி சுவாமிகள் பல்லாண்டுகள் சேவைகளைத் தொடர இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.*

***-கணபதிப்பிள்ளை சிவசங்கரநாதன் (J.P)***

*(சரசாலை)*

*முகமூடி கிழியும்வரை அனைவரும் நல்லவர்களே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப்பணிகள் (03.01.2025 தொடக்கம் 18.06.2025 வரை)

*– தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம் –*

**03.01.2025 வெள்ளிக்கிழமை**

அம்பாறை மாவட்டம் மாணிக்கமடு கிராமத்தில் அமைந்துள்ள வில்லூன்றி விநாயகர் ஆலயத்தின் அடிப்படைத் தேவையான மலசலகூடம் அமைப்பதற்காக 150,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**05.01.2025 ஞாயிற்றுக்கிழமை**

முல்லைத்தீவு - நெடுங்கேணி மாமடுச்சந்தி வெள்ளைப் பிள்ளையார் கற்பகா அறநெறிப் பாடசாலைக்கு ஏற்கனவே அமைக்கப்பட்ட கட்டிடத்தின் இரு பக்க கொட்டகைகள் 950,000. 00 ரூபா பெறுமதியில் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

**07.01.2025 செவ்வாய்க்கிழமை**

01) தொண்டைமானாறு J/383, தொண்டைமானாறு வடக்கு J/384, கெருடாவில் வடக்கு J/386, கெருடாவில் தெற்கு J/385, கெருடாவில் கிழக்கு J/387 பிரிவுகளுடைய 50 மாற்றுவலுவுடையோர்க்கு 60,000. 00 ரூபா பெறுமதியான போர்வைகள் (பெட்சீற்) வழங்கப்பட்டன.

02) தொண்டைமானாற்றைச் சூழவுள்ள பகுதிகளைச் சார்ந்த போசாக்கு குறைந்த சிறுவர்கள் மற்றும் கர்ப்பவதிகள் உள்ளடங்களாக தெரிவு செய்யப்பட்ட 27 குடும்பங்களுக்கு 121,500. 00 ரூபா பெறுமதியான சத்துமாப் பொருட்கள் (கௌப்பி, உழுந்து, கடலை, சோளம், சீனி, அரிசி, பயறு) மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது.

**08.01.2025 புதன்கிழமை**

01) திருகோணமலை - மூதூர் 02, பாலநகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கட்டிடப் பணிக்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) திருகோணமலை செல்வநாயகபுரம் உதயபுரி சுவாமி தந்திரதேவர் குன்றம் ஸ்ரீ லிங்கேஸ்வரர் ஆலய கட்டிடப் பணிக்காக 200,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

03) திருகோணமலை - விவேகானந்தர், அபயபுர, செல்வநாயகபுரம் பிரதேசத்தைச் சார்ந்த தெரிவுசெய்யப்பட்ட 13 மாணவர்களுக்கு 55,000. 00 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10.01.2025 வெள்ளிக்கிழமை**

வட்டுக்கோட்டை - வட்டு.தெற்கு இளம்நிலா விளையாட்டுக் கழகத்தினர்க்கு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்காக 35,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**11.01.2025 சனிக்கிழமை**

யாழ்ப்பாண மாவட்டங்களை சார்ந்த 320 விழிப்புலனற்ற குடும்பங்களுக்கு 500,000. 00 ரூபா பெறுமதியில் தைப்பொங்கலுக்கான அரிசி யாழ் விழிப்புலனற்ற சங்க தலைமையகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

**12.01.2025 ஞாயிற்றுக்கிழமை**

வவுனியா - கணேசபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறி மாணவர்களின் 42 குடும்பங்கள், கோயில் புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறி மாணவர்களின் 43 குடும்பங்கள், திருமூலர் அறநெறி மாணவர்களின் 45 குடும்பங்களுக்கும் 325,000. 00 ரூபா பெறுமதியான தைப்பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.

**17.01.2025 ஞாயிற்றுக்கிழமை**

பூநகரி தெளிகரை பிரதேசத்தை உடைய பூநகரி மகா வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவிக்கு 48,500. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

**22.01.2025 புதன்கிழமை**

01) வவுனியா கனகராஜன்குளம் பிரதேசத்தைச் சார்ந்த சிறுநீரகம் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு 40,000. 00 ரூபா நிதியும், விசேட தேவைக்கு உட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு 30,000. 00 ரூபா நிதியும் வழங்கப்பட்டன.

02) வவுனியா வடகாடு பிரமணாலங்குளம் முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவதற்காக மாதாந்தம் 15,000. 00 ரூபா நிதி வழங்கப்படுகிறது.

**24.01.2025 வெள்ளிக்கிழமை**

01) ஆன்மீக சமூகப் பணிகளிற்காக கரவெட்டியைச் சேர்ந்த திரு நாகேந்திரராஜா அவர்களுக்கும்,

02) புத்தூர் நவக்கிரியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் வாழ்வாதார் தேவைக்காகவும்

97,000. 00 ரூபா பெறுமதியான 02 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

03) யா/ அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு 120,000. 00 ரூபா பெறுமதியான கலர் பிறிண்டர், பிறிண்டர் என்பன வழங்கப்பட்டன.

*நட்புதான் சுகங்களில் மட்டுமல்லாமல் துக்கத்திலும் பங்கேற்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04) யாழ்ப்பாணம் பழைய மாணவர் சிப்பாய்கள் அமைப்பினருக்கு நெடுந்தீவில் 150 மாணவர்களுக்கு கல்விப் பயிற்சிப் பட்டறை நடாத்துவதற்கு 75,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

05) மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவிக்கு மடிக்கணனி வழங்கப்பட்டது.

06) நெடுங்கேணி தண்டுவான் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு ஈமச்சடங்கு, சமய அனுட்டானங்களுக்காக 25,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**25.01.2025 சனிக்கிழமை**

அராலி மத்தி, அராலி தெற்கு பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 29 குடும்பங்களுக்கு 116,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**28.01.2025 செவ்வாய்க்கிழமை**

அம்பாறை மாவட்டம் திருக்கோவில், விநாயகபுரம் உமிரி, திருப்பதி ஆகிய பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு 600,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**29.01.2025 புதன்கிழமை**

மொனராகலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற 195 மாணவர்களுக்கு 160,000. 00 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதோடு, பாடசாலை கட்டிடப் பணிக்காக 100,000. 00 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.

**31.01.2025 வெள்ளிக்கிழமை**

145,500. 00 ரூபா பெறுமதியான 03 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

01) அச்சுவேலி பிரதேசத்தைச் சேர்ந்த யா/ ஆவரங்கால் நடராஜா மகாவித்தியாலய தரம் 11 மாணவி.

02) வட்டுக்கோட்டை அராலி மத்தி பிரதேசத்தைச் சேர்ந்த யா/ வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி தரம் 12 மாணவன்

03) கரவெட்டி மத்தணி பிரதேசத்தைச் சேர்ந்த யா/ கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய தரம் 06 மாணவன்

04) மூத்த பிரஜைகள் குழு முதியோர் சங்கத்தினர்க்கு மூத்தோர்களை கௌரவிப்பதற்காக 25,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

05) யா/ துன்னாலை தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு துவிச்சக்கரவண்டி தரிப்பிடக் கொட்டகை அமைப்பதற்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

06) வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைக்கு 56,000. 00 ரூபா பெறுமதியான பல் வைத்திய சிகிச்சைப் பிரிவுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

*பிறருக்கு நன்மை செய்பவன் தனக்கும் நன்மையைத் தேடிக்கொள்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04.02.2025 செவ்வாய்க்கிழமை**

புத்தளம் சேனைக்குடியிருப்பு, மணல்குன்று, அபயபுர, அரலியபுயன பிரதேசங்களில் வாழும் பல்லின சமூகங்களைச் சேர்ந்த 80 குடும்பங்களுக்கு 280,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**07.02.2025 வெள்ளிக்கிழமை**

பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு மருத்துவச் செலவுக்காக 30,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டதுடன் மாதாந்தம் 10,000. 00 ரூபா வழங்குவதற்காகவும் தீர்மானிக்கப்பட்டது.

**09.02.2025 ஞாயிற்றுக்கிழமை**

01) அம்பாறை மாவட்டம் திருக்கோவில், விநாயகபுரம் ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு 300,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

02) அம்பாறை மாவட்டம் உமிரி பிரதேசத்தில் அமைந்துள்ள காயத்திரி அம்மன் ஆலய கட்டிடப் பணிக்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

03) உமிரி பிரதேச திருப்பதி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

**14.02.2025 வெள்ளிக்கிழமை**

01) மருதங்கேணி பிரதேச கிராமமட்ட சிறுவர் விளையாட்டு நிகழ்வுக்காக 50,000.00 ரூபா பெறுமதியான பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

02) பட்டியோலை சுன்னாகத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு மருத்துவச் செலவுக்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**28.02.2025 வெள்ளிக்கிழமை**

01) தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்திற்கு 240,000. 00 ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.

02) சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு நரம்பியல் புனருத்தாபன பிரிவுக்குரிய பக்கவாத நோயாளிகளுக்கான சிகிச்சை இயன் மருத்துவருக்கு வேதனம் வழங்குவதற்காக 70,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது. இந்நிதி தொடர்ச்சியாக 06 மாதங்களுக்கு வழங்கப்படும்.

03) இந்து கற்கைகள்பீடம் யாழ் பல்கலைக்கழகத்திற்கு மூன்றாவது சர்வதேச இந்து மாநாட்டிற்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

*வரவு அறிந்து செலவு செய்வது சிக்கனம். செலவு அறிந்து வரவு சேர்ப்பது நற்குணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04.03.2025 செவ்வாய்க்கிழமை**

01) பண்டாரவளை கொஸ்லந்த பகுதியில் அமைந்துள்ள ப/ ஸ்ரீ கணேசா தமிழ் மகா வித்தியாலயத்துக்கு 150,000. 00 ரூபா பெறுமதியான கருங்கல்லில் செதுக்கப்பட்ட பிள்ளையார் மற்றும் எலி உருவச்சிலைகள் வழங்கப்பட்டன.

02) பதுளை - வெளிமடை, வோர்விக் ப/ சரஸ்வதி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற 160 மாணவர்களுக்கு 150,000. 00 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் பாடசாலைக்கான அடிப்படைத் தேவைகளுக்காக 100,000. 00 ரூபா நிதியும் வழங்கப்பட்டன.

**14.03.2025 வெள்ளிக்கிழமை**

கோப்பாய் தெற்கு ஞான வைரவர் ஆலயத்தின் கட்டிடப் பணிக்காக 75,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**21.03.2025 வெள்ளிக்கிழமை**

01) யாழ் விழிப்புலனற்ற சங்கத்தின் அங்கத்தவராக உள்ள பார்வையற்ற இரண்டு குடும்பங்களின் வீடுகளுக்கு புதிய மின் இணைப்புக்கான செலவாக 130,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டன.

02) குப்பிழானைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு விவசாயத் தேவைக்காக 70,000. 00 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் மோட்டர் இயந்திரம் வழங்கப்பட்டது.

**28.03.2025 வெள்ளிக்கிழமை**

01) யா/ வலி தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்காக 40,000. 00 ரூபா பெறுமதியான பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

02) யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பிரிவுக்கான தொல்லியல் ஆய்வுக்காக 25,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டன.

**31.03.2025 திங்கட்கிழமை**

மலையகம் பண்டாரவளை கிரேக் பகுதியைச் சேர்ந்த இரு குடும்பங்களுக்கு 20,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

04.04. 2025 ஞாயிற்றுக்கிழமை

புத்தளம் சேனைக்குடியிருப்பு, மணல்குன்று, அபயபுர, அரலியபுயன பிரதேசங்களைச் சேர்ந்த பல்லின சமூகங்களைச் சேர்ந்த 55 குடும்பங்களுக்கு 200,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

*உண்மை மனிதனுக்குச் சொந்தம். பிழை அவன் காலத்திற்குச் சொந்தம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16.04.2025 புதன்கிழமை**

01) மன்னார் பெரியமடு காயாநகர் கிராமத்தில் விவசாய பயிர்ச் செய்கைக்காக இரு குடும்பங்கள் பயன்படுத்துவதற்காக 100,000. 00 ரூபா பெறுமதியில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டது.

02) மன்னார் வட்டக்கண்டல் குருவில் கிராமத்தில் முன்னால் போராளியான புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு மருத்துவச் செலவுக்காக 25,000. 00 ரூபா நிதியும் அத்தியாவசியமான உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

03) மன்னார் வங்காலை நறுவிலிக்குளம் கிராமத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு மருத்துவச் செலவுக்காக 25,000. 00 ரூபா நிதியும் அத்தியாவசியமான உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

04) மன்னார் மடு பெரியமுறிப்பு கிராமத்தில் இதய நோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு மருத்துவச் செலவுக்காக 25,000. 00 ரூபா நிதியும் அத்தியாவசியமான உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

**18.04.2025 வெள்ளிக்கிழமை**

01) தொண்டைமானாறு கெருடாவில் தெற்கு இளந்துளிர் அமையத்தினருக்கு சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வுக்காக 30,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**25.04.2025 வெள்ளிக்கிழமை**

291,000. 00 ரூபா பெறுமதியான 06 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

01) காரைநகர் களபூமி யாழ் பல்கலைக்கழக நுண்கலைக்கல்வி மாணவி

02) அச்செழு பிரதேசத்தைச் சேர்ந்த அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய தரம் 07 மாணவி

03) பொன்னாலை பிரதேசத்தைச் சேர்ந்த யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய தரம் 08 மாணவி

04) வேலணை, 06ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலணை மகா வித்தியாலய தரம் 09 மாணவி.

05) பலாலி வடக்கு, வசாவிளான் பகுதியைச் சேர்ந்த யா/ வசாவிளான் மத்திய மகா வித்தியாலய தரம் 10 மாணவி

06) தெல்லிப்பளை, மாவை கலட்டி பிரதேசத்தைச் சேர்ந்த யூனியன் கல்லூரி தரம் 09 மாணவி.

**27.04.2025 ஞாயிற்றுக்கிழமை**

வவுனியா பிரமணாலங்குளம் வடகாடு ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டிடம் 19,38,000. 00 ரூபா பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

*நம்பிக்கை என்பது கண் விழித்திருக்கும்போதே காண்கின்ற கனவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09.05.2025 வெள்ளிக்கிழமை**

யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்திற்கு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்காக 20,000. 00 ரூபா பெறுமதியான எழுது பொருட்கள் வழங்கப்பட்டன.

**11.05.2025 ஞாயிற்றுக்கிழமை**

தங்கோடை காரைநகரைச் சேர்ந்த அமரர்களான கனகலிங்கம் பத்மாவதி நினைவாக அவர்களது குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் கனகராஜன்குளம், பெரியகுளம் கிராமத்தைச் சேர்ந்த மாற்றுவலுவுடைய குடும்பம் ஒன்றிற்கு சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஒழுங்கமைப்பில் 19,50,000. 00 ரூபா நிதியில் புதிய வீடு அமைத்து கையளிக்கப்பட்டது.

**13.05.2025 செவ்வாய்க்கிழமை**

01) அம்பாறை திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு 100,000. 00 ரூபா பெறுமதியான போர்வைகள் (பெட்சீற்) வழங்கப்பட்டன.

02) தாண்டியடி தி.கோ திருப்பதி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு 100,000.00 ரூபா நிதியில் சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட்டது.

**16.05.2025 வெள்ளிக்கிழமை**

01) உடுத்துறை மகா வித்தியாலயத்திற்கு 240,000. 00 ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டன.

02) 172,000. 00 ரூபா பெறுமதியான 04 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

கொடிகாமம், மந்துவில் வடக்கைச் சேர்ந்த யா கொடிகாமம் அரசினர் வித்தியாலய தரம் 08 மாணவன்.

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கைச் சேர்ந்த யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் தரம் 07 மாணவன்

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த யா/ வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் தரம் 08 மாணவன்

சுன்னாகம், உடுவில் தெற்கைச் சேர்ந்த யா/ உடுவில் மகளிர் கல்லூரி தரம் 10 மாணவி.

03) மலையகம் பதுளை மகளிர் சிறுவர் இல்லத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவிக்கு 120,000. 00 ரூபா பெறுமதியான மடிக்கணனி வழங்கப்பட்டது.

**23.05.2025 வெள்ளிக்கிழமை**

01) வண்ணார்பண்ணை கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்துக்கு திருப்பணிச் செலவுக்காக 75,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) உடுவில் பிரஹரிஸ் இசை மன்றத்திற்கு இசை வாத்தியங்கள் கொள்வனவுக்காக 75,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

*வலிமை, துணிவு, உண்மை, தன்னடக்கம், மரியாதை உள்ளவனே உண்மை வீரன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) வடமராட்சி லயன்ஸ் கழகத்தினர்க்கு இமையாணன் முதியோர் சங்க அங்கத்தவர்களுக்கு ஒரு தொகுதி மூக்குக்கண்ணாடி வழங்குவதற்காக 40,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

04) சுன்னாகம் அபிநயா கலைக் கழகத்தினர்க்கு மாற்றுத் திறனாளிகள் மாணவர்களின் கலை நிகழ்வுகளுக்காக 15,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**06.06.2025 வெள்ளிக்கிழமை**

கோப்பாய் தெற்கு, அத்திதோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் திருப்பணிக்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**09.06.2025 திங்கட்கிழமை**

வரணி கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு 315,000. 00 ரூபா பெறுமதியான நீர் சுத்திகரிப்பு இயந்திரம் (நாள் ஒன்றிற்கு 2000 லீற்றர்) பொருத்தப்பட்டது.

**11.06.2025 புதன்கிழமை**

அம்பாறை திருக்கோவில் விநாயகபுரம் பிரதேசத்தில் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு 38,000. 00 ரூபா பெறுமதியான கூரைத் தகரங்கள் வழங்கப்பட்டன.

**13.06.2025 வெள்ளிக்கிழமை**

01) 97,000. 00 ரூபா பெறுமதியான இரண்டு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

மல்லாகம், இக்கிரானை கிராமத்தைச் சேர்ந்த ஸ்கந்தவரோதயா கல்லூர் தரம் 10 மாணவி

புலோலி, பருத்தித்துறையைச் சேர்ந்த வட இந்து மகளிர் கல்லூரி தரம் 10 மாணவி.

02) தெல்லிப்பளை சித்தியம்புளியடி கலைச்செல்வி சன சமூக நிலையத்தின் முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிக்கான நிதியும், மாணவர்களின் சீருடைக்காகவும் 60,000. 00 ரூபா வழங்கப்பட்டது.

**15.06.2025 ஞாயிற்றுக்கிழமை**

01) வவுனியா வடகாடு பிரமணாலங்குளம் முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும் பெரிய தம்பனை ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய அறநெறி மாணவர்களுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டன.

02) மன்னார் இரணை இலுப்பைக்குளம், சின்னவலயன்கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு 255,000. 00 ரூபா பெறுமதியான பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது.

*சோம்பல் என்பது இளைப்பாறுதல் அல்ல. அது வேலையை விட அதிகம் களைப்பைத் தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01.05.2025இல் இருந்து 18.06.2025 வரை**

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சூழவுள்ள பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களைத் தெரிவு செய்து மாதாந்தம் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப (15கிலோ, 12 கிலோ, 10கிலோ, 07கிலோ) அரிசி வழங்கப்பட்டு வருகின்றது.

இலங்கையின் சகல பகுதிகளில் இருந்தும் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 200 மாணவர்களுக்கு மாதாந்தம் அவர்களின் கல்வி ஊக்குவிப்புத் தொகையாக 6000. 00 ரூபா வங்கிக் கணக்கில் இடப்பட்டு வருகின்றது.

வருடாந்த கதிர்காம உற்சவத்தை முன்னிட்டு தொண்டைமானாறு, ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி கதிர்காமம் ஆலயம் வரையான பாதயாத்திரைக் குழுவினர்க்கு பல கட்டங்களாக கரந்தாய் பிள்ளையார் ஆலயம், புதுக்குடியிருப்பு கந்தசாமி ஆலயம், மாமுனை அம்மன் ஆலயம், திருகோணமலை பட்டித்திடல் பிள்ளையார் ஆலயம், மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயம், அம்பாறை சீரடி சாய் கருணாலயம் போன்ற இடங்களில் மருத்துவப் பொருட்கள், பழவகைகள், தேனீர் பொருட்கள், பிஸ்கற் வகைகள், தண்ணீர்ப் போத்தல்கள் என்பன வழங்கப்பட்டன.

இறுதியாக குமண யால காட்டுப் பாதை வழியாக யாத்திரையினை மேற்கொண்ட குழுவினர்க்கு பத்து லட்சம் ரூபா நிதிச்செலவில் நீர் விநியோகம், அன்னதானம் வழங்குதல், உலர் உணவுப் பொதிகள் என்பன வழங்கப்பட்டன.

ஆச்சிரமம் ஆற்றும் இன்னோரன்ன பணிகளுக்கு பேருதவியாக அமைவது சந்நிதி வேலவனது பூரணமான அருளும், சந்நிதியான் ஆச்சிரமத்தோடு இணைந்த அடியார்களது ஆதரவும்தான் என்பதை கருத்தில்கொண்டு அனைவருக்கும் சந்நிதி வேலவனது பூரணமான அருள் கிடைக்கவேண்டுமென பிரார்த்திப்பதோடு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.



திருகோணமலை - உதயபுரி, செல்வநாயகபுரம் முத்துக்குமார சுவாமி திருக்கோவில் ஆலய நிர்வாகத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக, ஆலய அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டிடம் அமைப்பதற்கும், ஆலயத்தின் கட்டுமானப் பணிகளுக்கும் நிதி உதவி வழங்கியதையிட்டும் ஆச்சிரம சுவாமிகளைக் கௌரவித்தனர்.

*சிந்தனையும் செயலும் ஒன்றாகிவிட்டால் வாழ்க்கையில் வெற்றியை எளிதில் பெற்றுவிடலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆச்சிரமத்தில் இடம்பெறும் விசேட நிகழ்வுகள்

**23.08.2025 சனிக்கிழமை 01ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**
விடயம் :- "பஜனை"
வழங்குபவர்கள் :- வடபிராந்திய சாயி சமித்தி நிலைய அன்பர்கள்

**24.08.2025 ஞாயிற்றுக்கிழமை 02ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**
சொற்பொழிவு :- "முருக வழிபாடு"
வழங்குபவர் :- திரு க. பிரணவன் அவர்கள்
(யாழ். பல்கலைக்கழக மாணவன்)

**25.08.2019 திங்கட்கிழமை 03ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**
சொற்பொழிவு :- "இறை தர்மம்"
வழங்குபவர் :- திரு செ. ஸ்ரீஆதரன் அவர்கள்
(ஆசிரியர்)

**26.08.2025 செவ்வாய்க்கிழமை 04ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**
சொற்பொழிவு :- "ஒரு திருமுருகன் வந்தான்"
வழங்குபவர் :- திரு வி. நவநீதன் அவர்கள்
(ஆசிரியர்)

**27.08.2025புதன்கிழமை 05ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**
சொற்பொழிவு :- "முருகன் திருவருள்"
வழங்குபவர் :- திரு ஜெ. துஷாந்தன் அவர்கள்
(ஆசிரியர்)

**28.08.2025 வியாழக்கிழமை 06ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**
சொற்பொழிவு :- "உதித்தனன் உலகம் உய்ய"
வழங்குபவர் :- திரு இ. கிருஷ்ணராஜ் அவர்கள்
(உப அதிபர்)

**29.08.2025 வெள்ளிக்கிழமை 07ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**
"ஆவணி மாத ஞானச்சுடர் வெளியீடு"
வெளியீட்டுரை :- திரு பொன். சந்திரவேல் அவர்கள்
மதிப்பீட்டுரை :- திரு இரா. ஸ்ரீநடராஜா அவர்கள்
(இளை. அதிபர்)

*வெற்றி பெறும் ஒவ்வொரு செயலும் ஒரு குறிக்கோளாகி விடுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30.08.2025 சனிக்கிழமை 08ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "சமூக ஒழுங்கு"
வழங்குபவர் :- திரு ச. வாகீசன் அவர்கள்
(ஆசிரியர்)

**31.08.2025 ஞாயிற்றுக்கிழமை 09ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பற்று"
வழங்குபவர் :- திருமதி ல. கவிதா அவர்கள்
(ஆசிரியர்)

**01.09.2025 திங்கட்கிழமை 10ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பாடிப் பரவும் பணியே"
வழங்குபவர் :- திரு ச. லலீசன் அவர்கள்
(அதிபர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) (பூங்காவனம்)

**02.09.2025 செவ்வாய்க்கிழமை 11ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "சைவத்தின் பெருமை"
வழங்குபவர் :- திரு ஜெ. கோபிராஜ் அவர்கள்
(பொது சுகாதார பரிசோதகர்)

**03.09.2025 புதன்கிழமை 12ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "திருமுருகாற்றுப்படை"
வழங்குபவர் :- திரு நா. நவராஜ் அவர்கள்
(உளவளத் துணையாளர்)

**04.09.2025 வியாழக்கிழமை 13ஆம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தபுராணம் காட்டும் வாழ்வியல்"
வழங்குபவர் :- ச. முகுந்தன் அவர்கள்
(சைவப்புலவர்)

| | | |
|---|---|---|
| **05.09.2025** | **வெள்ளிக்கிழமை** | **சப்புறம்** |
| **06.09.2025** | **சனிக்கிழமை** | **தேர்** |
| **07.09.2025** | **ஞாயிற்றுக்கிழமை** | **தீர்த்தம்** |

*மிக அதிக உயரத்தை அடைய விரும்பினால் கீழ்மட்டத்திலிருந்து தொடங்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத வாராந்த நிகழ்வுகள்

**01.08.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு:-** "ஞானவேல்"

**வழங்குபவர் :-** திரு த. தவநேசன் அவர்கள்

[சித்த மருத்துவத்துறை மருந்தாளர்]

---

**08.08.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு:-** "முருக பக்தியாளர்கள்"

**வழங்குபவர் :-** திரு நி. பாபுதரன் அவர்கள்

[ஆசிரியர்]

---

**15.08.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**22.08.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு:-** "மகாபாரதம்" (தொடர்)

**வழங்குபவர் :-** செஞ்சொற் செல்வன் திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**29.08.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் ஆவணி மாத வெளியீடு

**வெளியீட்டுரை:-** திரு பொன். சந்திரவேல் அவர்கள்

[ஆசிரியர்]


**மதிப்பீட்டுரை:-** திரு இரா. ஸ்ரீநடராசா அவர்கள்

[இளை. அதிபர்]

**332 ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org